# கலைத் தமிழ் இலக்கணம்

முதற் புத்தகம் பகுதி I

நான்காம் படிவம் பொதுப் பகுதி

ஆசிரியர் :

கலைப்பெரும் புலவர்,

**வித்துவான், ஆ. குருசாமி ஐயா அவர்கள்,**

தலைமைத் தமிழ் ஆசிரியர்,

நகராள்மன்ற உயர்நிலைப்பள்ளி, கருவூர்.

**தமிழ்நாடு நூற்பதிப்பகம்,**

இலிங்காயத்தார் தெரு,

உறையூர்—திருச்சிராப்பள்ளி.

—

உரிமை பதிவு] 1957 [விலை 0–10–0

(N. P. 62)

T17553

R005K03

# கலைத் தமிழ் இலக்கணம்

## முதற் புத்தகம் பகுதி I

## நான்காம் படிவம் - பொதுப் பகுதி

27—1—54-ல் வெளியிடப்பட்ட புதிய பாட திட்டப்படி இலக்கணப் பகுதியும், மொழிப் பயிற்சியும் அமைந்துள்ளன.

(இடையிடையே பலவகைப் பயிற்சி முறைகளும், வினாக்களும் அமைக்கப்பெற்றுள்ளன)


ஆசிரியர் :

கலைப்பெரும் புலவர்,

**வித்துவான், ஆ. குருசாமி ஐயா அவர்கள்,**

தலைமைத் தமிழ் ஆசிரியர், நகராள்மன்ற உயர்நிலைப்பள்ளி,

கரூவூர்.



**தமிழ்நாடு நூற்பதிப்பகம்,**

இலிங்காயத்தார் தெரு,

உறையூர்—திருச்சிராப்பள்ளி.

1957

[விலை 0-10-0

(N. P. 62)



உரிமை பதிவு]

முதற் பதிப்பு .... 1954
இரண்டாம் பதிப்பு 1955
மூன்றும் பதிப்பு 1957

*Approved by the Madras Text Book Committee*
*(For class use for High School IVth Form Part I)*
*Vid. Ft. St. George Gazette Page 26, Dated 4-5-55.*

வாசன் அச்சகம், 43, அல்லிமால் தெரு, திருச்சிராப்பள்ளி.

# முன்னுரை

அரசாங்கத்தார் 27—1—54-ல் புதிதாகத் திருத்தி அமைத்து வெளியிட்ட இலக்கண பாட திட்டத்தை முற்றும் தழுவி நான்காம் படிவம் பொதுப்பகுதிக்கு இவ்விலக்கண நூல் எழுதப்பெற்றுள்ளது.

கீழ்ப் படிவங்களில் தெளிவான இலக்கண அறிவு அமையாதிருப்பினும் நான்காம் படிவத்திற்கு வந்த மாணுக்கர்களுக்கு இலக்கண அறிவு, நன்கு அமையவேண்டுமெனவும் சிறப்பிலக்கணம் பயில்வதற்கு அடிப்படையாக இருக்கவேண்டுமெனவும் கருதியே ஒவ்வொரு பகுதியும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

இலக்கணம், மொழியில் இயற்கையாக அமைந்துள்ள முறைகளை முன் எடுத்துக்காட்டி விளக்கிப் பின் விதிகளை அமைத்துக்கொள்ளுமுறையில் எழுதப்பெற்றுள்ளது விதிகள் மனதில் பதியும்வண்ணம் தடித்த எழுத்துக்களால் அமைத்தும் அவற்றிற்குரிய நன்னூல் சூத்திரங்களை இறுதியில் அமைத்தும் விளக்கப்பட்டுள்ளது.

படித்தறிந்த பகுதிகளில் தெளிவுண்டாகவும், தேர்வில் வினா வரும் முறைகளையும், விடைகாணும் முறைகளையும் அறிந்துகொள்ளவும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்தருமுறையில் இடையிடையே சிறந்த பயிற்சிகளும் தகுந்த வினாக்களும் அமைக்கப்பெற்றுள்ளன.

ஆதலால், கல்வி நிலையத்தலைவர்களும் ஆசிரியர்களும் ஆதரவளிக்க வேண்டுமெனவும், மாணுக்கர்களும் மற்றத் தமிழ் அன்பர்களும் விரும்பிப் பயின்று பயன்பெற வேண்டுமெனவும் வேண்டிக்கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,

**ஆசிரியன்.**

# பொருளடக்கம்

## நான்காம் படிவம்—பொது இலக்கணம்

(27—1—54-உ கெஜட்டில் வந்துள்ள பாட திட்டம்)


I. **எழுத்து** பக்கம்

1. முதலெழுத்து வகை 2
2. சுட்டு, வினு. 5
3. சார்பெழுத்து 8
4. எழுத்தொலியைத் தெரிதல் 13
5. மாத்திரை, 6. போலி 17

II. **சொல்**

1. பகுபதம், பகாப்பதம். 19
2. சொல்வகை 21
3. பெயர்ச்சொல் 22
4. வினைச்சொல் 37
5. இடைச்சொல் 41
6. உரிச்சொல் 44

III. **பொது.** தொகைநிலைத்தொடர், தொகாநிலைத்தொடர் 46

IV. **புணர்ச்சி**

1. நிலைமொழி, வருமொழி. 47
2. வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி. 47
3. இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி. 49
4. உடம்படு மெய் 51
5. குற்றுகரப் புணர்ச்சி 53

V. **யாப்பு.** செய்யுளின் பொது இலக்கணம் 55

VI. **அணி.** அணியின் பொது இலக்கணம் 57
உவமையணி 57
உருவகவணி 59

**மொழிப் பயிற்சி**

1. வாக்கியம் 62
2. வாக்கியப் பொருத்தம் 65
3. எழுத்துப் பிழைகளும், திருத்தமும். 68
4. வாக்கிய முடிவுப் பிழைகளும், திருத்தமும். 72
5. வாக்கியமாற்றம் 73
6. நிறுத்தக் குறிகள் 74
7. வல்லெழுத்து மிகுமிடங்களும், மிகாவிடங்களும். 77

# கலைத் தமிழ் இலக்கணம்

## நான்காம் படிவம் (Form IV)

---

## பகுதி 1 பொது (Part I)

உலகில் பல மொழிகள் வழங்கி வருகின்றன. அவற்றுள், தமிழ் மொழி தொன்மையும், இயற்கைத் தன்மையும், மேன்மையும் பெற்றுத் திகழும் **உயர் தனிச் செம்மொழியாகும்.** தமிழ் மொழியின் தன்மையை அறிந்துகொள்ளத் தமிழ் இலக்கண அறிவு மிகுந்த உதவியாக இருக்கும். ஆதலால், தமிழ் இலக்கணத்தை நன்கு பயிலவேண்டும்.

**எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி** எனத் தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும்.

# I. எழுத்து

நாம் பேசும்போது பல சொற்களால் நமது கருத்தைத் தெரிவிக்கின்றோம். சொற்களில் பல எழுத்துக்கள் அமைந்துள்ளன. ஒவ்வோரெழுத்தும் தனித்தனி ஒலியை யுடையது. அவ் வொலிதான் மொழிக்கு முதற் காரணமாகும்.

**தமிழ்** என்பது ஒரு சொல். இதில் **த-மி-ழ்** என்ற மூன்று ஒலிகள் உள்ளன. இந்த மூன்று ஒலிகளும் தமிழ் என்னும் சொல்லுக்கு முதற் காரணம் ஆகும். எனவே **தமிழ்** மூன்று எழுத்துக்களால் ஆன மொழி—சொல் ஆகும்.

**சொல்லுக்கு முதற் காரணமாக உள்ள ஒலியே எழுத்து ஆகும்.**

**குறிப்பு :** எழுத்துக்களைச் சொல்லும்போது ஒலி மூலமாகக் காதால் கேட்டறிவது **ஒலி வடிவம்** ஆகும்; எழுதப்பட்டபின் கண்ணுல் பார்த்தறிவது **வரிவடிவம்** ஆகும்.

எழுத்துக்களுக்கு ஒலிவடிவம், வரிவடிவம் என இரண்டு வடிவங்கள் உண்டு. ஒலிவடிவம் முன் உண்டானது; வரிவடிவம் எழுதப்பட்டபின் உண்டானது.

தும்மல், இருமல், கனைத்தல் முதலானவற்ருல் உண்டாகும் ஒலிகள் சொல்லுக்கு முதற்காரணமாக அமையாமையால் அவை எழுத்தெனப்படா.

தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்கள் **முதலெழுத்து, சார்பெழுத்து** என இரண்டு வகைப்படும்.

## 1. முதல் எழுத்து வகை

**உயிரெழுத்து, மெய்யெழுத்து** என முதலெழுத்து இரண்டு வகைப்படும்.

**உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும், மெய் எழுத்துக்கள் பதினெட்டும் ஆக முப்பது எழுத்துக்களும் முதலெழுத்துக்கள் ஆகும்.**

**குறிப்பு :** உயிர்மெய் முதலான சார்பெழுத்துக்கள் பிறப்பதற்கு முதலாக (காரணமாக) இருப்பதால் இவை முதலெழுத்தெனப் பெயர்பெற்றன.

**நன்னூல் : உயிரும் உடம்புமாம் முப்பது முதலே.**

## (i) உயிர் எழுத்து

**அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ** என்னும் பன்னிரண்டு எழுத்துக்களும் தாமே ஒலிக்கும் **உயிரெழுத்துக்கள்** ஆகும்.

**குறிப்பு:** உயிர் தனித்தும் உடலோடு கூடியும் இயங்குதல் போல, இவை தனித்தும் மெய்யெழுத்தோடு கூடியும் ஒலிப்பதால் **உயிர் எழுத்துக்கள்** எனப் பெயர் பெற்றன.

இவை **ஆவி** எனவும் பெயர் பெறும். (உயிர் எழுத்து-உயிர் போன்ற எழுத்து)

### குறில், நெடில்.

**குறில்:** **அ**து, **இ**து, **உ**டை, **எ**டு, **ஒ**ன்று இச் சொற்களின் முதலில் வந்துள்ள **அ, இ, உ, எ, ஒ** என்னும் ஐந்து உயிரெழுத்துக்களும் குறுகிய ஓசையுடன் ஒலிக்கின்றன. ஆதலின், இவை **குறில்—குற்றெழுத்து** எனப்படும்.

**அ, இ, உ, எ, ஒ, என்னும் ஐந்தும் குறில் ஆகும்.**

**நெடில்:** **ஆ**டு, **ஈ**, **ஊ**து, **ஏ**டு, **ஐ**யன், **ஓ**து, **ஔ**வை. இச் சொற்களின் முதலில் உள்ள **ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ** என்னும் ஏழு உயிரெழுத்துக்களும் நீண்ட ஓசையுடன் ஒலிக்கின்றன. ஆதலின், இவை **நெடில்—நெட்டெழுத்து** எனப்படும்.

**ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழும் நெடில் ஆகும்.**

**குறில், நெடில்** என உயிரெழுத்துக்கள் இரண்டு வகைப்படும்.

**நன்னூல்:** **அ இ உ எ ஒ க் குறிலைந்தே.**
**ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்.**

## (ii) மெய்யெழுத்து

**க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்** என்னும் பதினெட்டு எழுத்துக்களும் தாமே ஒலிக்காத **மெய்யெழுத்துக்கள்** ஆகும்.

**குறிப்பு :** மெய் (உடல்) உயிரோடு கூடியே இயங்குதல் போல, இவை உயிரெழுத்துக்களோடு கூடி ஒலிப்பதால் **மெய் யெழுத்துக்கள்** எனப் பெயர் பெற்றன. (மெய் எழுத்து — மெய் போன்ற எழுத்து)

இவை **உடல், உடம்பு, உறுப்பு, ஒற்று, புள்ளி** எனவும் பெயர் பெறும்.

### மெய்யெழுத்துக்களின் வகை

மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் ஒரே விதமாக ஒலிக் காமல் பல வல்லோசையுடனும், பல மெல்லோசையுடனும், பல இவ்விரண்டினுக்கும் இடைப்பட்ட இடைத்தரமான ஓசை யுடனும் ஒலிக்கும். ஆதலால், மெய்கள் **வல்லினம், மெல்லினம், இடையினம்** என மூன்று வகைப்படும்.

**வல்லினம் :** சு**க்**கு, க**ச்**சு, ப**ட்**டு, மு**த்**து, உ**ப்**பு, ப**ற்**று.

இச்சொற்களின் இடையில் உள்ள **க், ச், ட், த், ப், ற்** என்னும் ஆறு மெய்களும் வலிய ஓசையுடன் ஒலிக்கின்றன. ஆதலின், இவை **வல்லினம்** எனப்படும். இவை **வல் லெழுத்து, வன்கணம், வன்மை, வலி** எனவும் பெயர் பெறும்.

**க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறும் வல்லினம் ஆகும்.**

**மெல்லினம் :** ச**ங்**கு, ப**ஞ்**சு, வ**ண்**டு, ப**ந்**து, க**ம்**பு, **கன்**று.

இச்சொற்களின் இடையில் உள்ள **ங், ஞ், ண், ந், ம், ன்** என்னும் ஆறு மெய்களும் மெல்லிய ஓசையுடன் ஒலிக்கின்றன. ஆதலின் இவை **மெல்லினம்** எனப்படும். இவை **மெல்லெழுத்து, மென்கணம், மென்மை, மெலி** எனவும் பெயர்பெறும்.

**ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறும் மெல்லினம் ஆகும்.**

**இடையினம்** : வாய்மை, மார்பு, முல்லை, கவ்வை, ஏழ்மை, வள்ளி. இச் சொற்களின் இடையில் உள்ள **ய், ர், ல், வ், ழ், ள்** என்னும் ஆறு மெய்களும் வல்லினம் மெல்லினம் ஆகிய இரண்டிற்கும் இடைப்பட்ட இடைத்தரமான ஓசையுடன் ஒலிக்கின்றன. ஆதலின் இவை **இடையினம்** எனப்படும். இவை **இடையெழுத்து, இடைக்கணம், இடைமை, இடை** எனவும் பெயர்பெறும்.

**ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறும் இடையினம் ஆகும்.**

வல்லினம், மெல்லினம், இடையினம் என மெய்கள் மூவகைப்படுதல் காண்க.

**நன்னூல் : வல்லினம் க ச ட த ப ற என ஆறே.**
**மெல்லினம் ங ஞ ண ந ம ன என ஆறே.**
**இடையினம் ய ர ல வ ழ ள என ஆறே.**

## 2 சுட்டு, வினா.

### சுட்டெழுத்து

அவன் படித்தான், **இது** உண்டது. இத்தொடர்களில் உள்ள 'அவன்' என்ற சொல் ஒரு மனிதனையும், 'இது' என்ற சொல் ஒரு பொருளையும் சுட்டிக் காட்டுகின்றது. இங்ஙனம் சுட்டிக் காட்டும் சொற்கள் **சுட்டுப் பெயர்ச்**

**சொற்கள்** எனப்படும். இவ்வாறு வரும் சுட்டுப் பெயர்களுக்கு முன்னால் நிற்கும் **அ, இ, உ** என்னும் எழுத்துக்கள் **சுட்டெழுத்துக்கள்** எனப்படும்.

**அ, இ, உ என்னும் மூன்று எழுத்துக்களும் ஒரு சொல்லில் முன் நின்று சுட்டுப் பொருளை உணர்த்தும்போது சுட்டெழுத்துக்கள் ஆகும்.**

**அகச்சுட்டு, புறச்சுட்டு** எனச் சுட்டு இரண்டு வகைப்படும்.

**அ**வன், **அ**வள், **அ**வர், **அ**து, **அ**வை.
**இ**வன், **இ**வள், **இ**வர், **இ**து, **இ**வை.
**உ**வன், **உ**வள், **உ**வர், **உ**து, **உ**வை.

இவற்றில் சுட்டெழுத்துக்கள் சொற்களின் அகத்தில் நின்று சுட்டுப் பொருளைத் தருவதால் இவை **அகச்சுட்டு** எனப்படும்.

**அ**ம்மனிதன், **இ**ம்மாடு, **உ**வ்வீடு.

இவற்றில் சுட்டெழுத்துக்கள் சொற்களின் புறத்தில் நின்று சுட்டுப் பொருளைத் தருவதால் இவை **புறச்சுட்டு** எனப்படும்.

**சொல்லின் உள்ளே சுட்டெழுத்து நிற்பது அகச்சுட்டு ஆகும்; சொல்லின் வெளியே சுட்டெழுத்து நிற்பது புறச்சுட்டு ஆகும்.**

**குறிப்பு** :—அகரச் சுட்டு தொலைவில் உள்ள பொருள்களையும், இகரச் சுட்டு அண்மையில் உள்ள பொருள்களையும், உகரச் சுட்டு நடுவிலும் பின் பக்கமும் மேல் பக்கமும் உள்ள பொருள்களையும் சுட்டிக் காட்டும்.

இவ்வாறு சுட்டுப் பொருளை உணர்த்தாமல் 'அம்மி, உரல், இலை' எனப் பிற சொற்களில் வரும் 'அ, இ, உ' என்னும் எழுத்துக்கள் சுட்டெழுத்துக்கள் ஆகா.

**நன்னூல்: அ இ உம்முதல் தனிவரின் சுட்டே.**

## வினவெழுத்து

**எ**து? **எ**ன்ன? **ஏ**து? **யா**து? **யா**ர்? **(எ, ஏ, யா)**
முருக**னா**? கந்த**னோ**? அவ**னே**? **(ஆ, ஓ, ஏ)**

இச்சொற்கள் வினாப்பொருளில் வந்துள்ளன. இங்ஙனம் வினாப்பொருளில் வரும் சொற்கள் வினாச் சொற்கள் எனப் படும். இவற்றில் **எ, யா** என்னும் எழுத்துக்கள் மொழியின் முதலிலும், **ஆ, ஓ** என்னும் எழுத்துக்கள் மொழியின் இறுதியிலும், **ஏ** என்னும் எழுத்து மொழியின் முதலிலும் இறுதியிலும் நின்று வினாப் பொருளை உணர்த்துகின்றன. இவ்வாறு வினாப் பொருளை உணர்த்திவரும் எழுத்துக்கள் **வினாவெழுத்துக்கள்** எனப்படும்.

**எ, ஏ, ஆ, ஓ என்னும் உயிரெழுத்துக்களும், யா என்னும் உயிர்மெய்யெழுத்தும் ஒரு சொல்லில் நின்று வினாப்பொருளை உணர்த்தும்போது வினாவெழுத்துக்கள் ஆகும்.**

இவற்றுள் **எ, யா** இரண்டும் மொழியின் முதலில் நின்று வினாவாகும். **ஆ, ஓ** இரண்டும் மொழியின் இறுதியில் நின்று வினாவாகும். **ஏ** மொழியின் முதலிலும் இறுதியிலும் நின்று வினாவாகும்.

**அகவினா, புறவினா** என வினா இரண்டு வகைப்படும்.

**எ**வன்? **எ**வள்? **எ**வர்? **எ**து? **எ**வை?
**யா**வன்? **யா**து? **யா**வை? **ஏ**து? **ஏ**ன்?

இவற்றில் **எ, யா, ஏ** என்னும் வினாவெழுத்துக்கள் சொற்களின் அகத்தில் நின்று வினாப் பொருளைத் தருவதால் இவை **அகவினா** எனப்படும்.

கந்தனா? (கந்தன் + ஆ) முருகனோ? (முருகன் + ஓ)
அவனே? (அவன் + ஏ) எம்மாடு? (எ + மாடு)

இவற்றில் **எ** என்னும் வினாவெழுத்து மொழிக்கு முதலில் புறத்தில் நின்றும் **ஆ, ஓ, ஏ** என்னும் வினாவெழுத்துக்கள் மொழியின் இறுதியில் புறத்தில் நின்றும் வினாப் பொருளைத் தருவதால் இவை **புறவினா** எனப்படும்.

**சொல்லின் உள்ளே வினாவெழுத்து நிற்பது அகவினா ஆகும்; சொல்லின் வெளியே வினாவெழுத்து நிற்பது புறவினா ஆகும்.**

**குறிப்பு:** எ, ஏ அகவினா, புறவினா இரண்டிலும் வரும். **ஆ,** ஓ புறவினாவில் மட்டும் வரும்.

**யா**ங்ஙனம்? என **யா** சிறுபான்மை புறவினாவிலும் வரும்.

**நன்னூல் :** **எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்**
**ஏ இரு வழியும் வினாவா கும்மே.**

## 3. சார்பெழுத்து

முதலெழுத்துக்களைச் சார்ந்து உண்டாகும் எழுத்துக்கள் **சார்பெழுத்துக்கள்** எனப்படும்.

**உயிர்மெய், ஆய்தம், குற்றியலுகரம், குற்றியலிகரம்** முதலாகச் சார்பெழுத்துப் பத்து வகைப்படும்.

### (i) உயிர்மெய்யெழுத்து

**அகல்.** இச்சொல்லில் முதலில் உள்ள 'அ' என்பது உயிர் எழுத்தாகும். இறுதியில் உள்ள 'ல்' என்பது

மெய்யெழுத்தாகும். இடையில் உள்ள **க** என்பது க் **+** அ என்ற இரண்டு எழுத்துக்களின் ஒலிகளும் சேர்ந்து உண்டான எழுத்தாகும். இவ்வாறு உயிர் எழுத்தும் மெய்யெழுத்தும் சேர்வதால் உண்டாகும் எழுத்து **உயிர்மெய் யெழுத்து** எனப்படும்.

**உயிரெழுத்து மெய்யெழுத்தோடு சேர்வதால் உண்டாகும் எழுத்து உயிர்மெய் யெழுத்து ஆகும்.**

க் + அ = க. க் + ஈ = கீ. க் + எ = கெ. க் + ஒ = கொ.
க் + ஆ = கா. க் + உ = கு. க் + ஏ = கே. க் + ஓ = கோ.
க் + இ = கி. க் + ஊ = கூ, க் + ஐ = கை. க் + ஔ = கௌ.

'க்' என்னும் மெய்யுடன் பன்னிரண்டு உயிர்களும் சேர்வதால் பன்னிரண்டு உயிர்மெய் யெழுத்துக்கள் உண்டாயின.

இவ்வாறே பதினெட்டு மெய்களோடும் பன்னிரண்டு உயிர்களும் தனித்தனிச் சேர்வதால் $18 \times 12 = 216$ இருநூற்றுப் பதினாறு உயிர்மெய் யெழுத்துக்கள் உண்டாகும்.

இவை உயிரும் மெய்யும் சார்ந்து வருவதால் **சார்பெழுத்துக்கள்** எனப்பட்டன.

**குறிப்பு:** உயிர்மெய் யெழுத்துக்களைக் குறில், நெடில் என இரண்டு வகைகளாகவும், வல்லினம் முதலான மூன்றுவகைகளாகவும் பிரித்துக் கூறலாம்.

| | | |
|---|---|---|
| 1. | உயிர்மெய்க் குற்றெழுத்துக்கள் | $18 \times 5 = 90$ |
| | உயிர்மெய் நெட்டெழுத்துக்கள் | $18 \times 7 = 126$ |
| | ஆக | 216 |

| | | |
|---|---|---|
| 2. | உயிர்மெய் வல்லெழுத்துக்கள் | 12 × 6 = 72 |
| | உயிர்மெய் மெல்லெழுத்துக்கள் | 12 × 6 = 72 |
| | உயிர்மெய் இடையெழுத்துக்கள் | 12 × 6 = 72 |
| | ஆக | 216 |

## (ii) ஆய்தவெழுத்து

எஃகு, அஃது, இச்சொற்களின் இடையில் மூன்று புள்ளி வடிவமாக வந்துள்ள எழுத்து மிக நுட்பமான ஓசையுடையது. தனக்குப் பின் வரும் வல்லெழுத்துக்களின் ஒலியைச் சற்று மென்மையாகவும், நுண்மையாகவும்செய்யும் தன்மையுடையது. ஆதலின், இது **ஆய்தவெழுத்து** எனப்படும்.

ஆய்தம்—நுண்மை, கருவி, இவ்வெழுத்து நுண்ணிய ஓசையுடையதாகவும், பிற எழுத்தொலியை நுண்மையாக்கும் கருவியாகவும் இருப்பதால் இப்பெயர் பெற்றது.

ஆய்தம் தனித்து வராமல் குற்றெழுத்திற்கும் உயிர்மெய் வல்லெழுத்திற்கும் இடையில் வரும்.

**குற்றெழுத்திற்கும் உயிர்மெய் வல்லெழுத்திற்கும் இடையில் நுட்பமான ஓசையுடன் மூன்று புள்ளி வடிவமாய் வரும் எழுத்து ஆய்தவெழுத்து ஆகும்.**

**காட்டு:** அஃகம், எஃகு, கஃசு, பஃறுளி, அஃகேனம்.

**குறிப்பு:** அஃகம்—தானியம், கஃசு—காற்பலம், பஃறுளி—பண்டைத் தமிழ்க் கண்டமாகிய குமரிக் கண்டத்தில் ஓடிய யாறு (பஃறுளியாறு). அஃகேனம்—ஆய்தவெழுத்து.

ஆய்தம் தனித்து ஒலிக்காமையால் உயிருமன்று; உயிருடன் கூடி ஒலிக்காமையால் மெய்யுமன்று; அவற்றைச் சார்ந்து நின்று ஒலித்தலால் **சார்பெழுத்து** எனப்பட்டது.

**நன்னூல் : குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி**
**உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.**

## (iii) குற்றியலுகரம்

வல்லின மெய்யுடன் கூடி மொழி இறுதியில் வரும் உகரம் சிலவிடங்களில் தனக்குரிய (ஒரு மாத்திரையளவான) ஓசையில் குறைந்து (அரைமாத்திரையளவாய்) ஒலிக்கும். அவ்விடங்களில் அது **குற்றியலுகரம்** எனப் பெயர் பெறும்.

புகு, பசு, விடு, அது, அறு. இச்சொற்களின் இறுதியில் வந்துள்ள உகரம் ஓசை குறையாமல் ஒலிக்கின்றது. இவ்வாறு தனிக்குறிலை அடுத்து இறுதியில் வரும் இடங்களில் உகரம் ஓசை குறையாமல் ஒலிக்கும்.

கா**து**, கட்**டு**, கன்**று**, மார்**பு**, வர**கு** இச்சொற்களின் இறுதியில் வந்துள்ள உகரம் ஓசை குறைந்து ஒலிக்கின்றது. இவ்வாறு தனிக்குறிலல்லாத மற்றைய எழுத்துக்களை அடுத்து மொழி இறுதியில் வல்லின மெய்களுடன் கூடி வரும் உகரம் ஓசை குறைந்து ஒலிக்கும். இது **குற்றியலுகரம்** எனப்படும்.

ஒலிக்கும் முறைப்படி ஒலித்து, ஓசை நுட்பத்தால் குறைந்தொலிப்பதை உணரவேண்டும்.

**தனிக்குறிலல்லாத மற்றைய எழுத்துக்களை அடுத்து மொழி இறுதியில் வல்லின மெய்களோடு கூடி வரும் உகரம் தனக்குரிய மாத்திரையிற் குறைந்து ஒலிக்கும் குற்றியலுகரம் ஆகும்.**

**காட்டு:** பாகு, காசு, ஆடு, ஊ**து**, சோ**று**. தனிக் குறிலல்லாத நெடில்களை அடுத்து வந்தது.

சுக்**கு**, பஞ்**சு**, சால்**பு**, அஃ**து**, மிலா**று**. தனிக்குறி லல்லாத மெய்கள், ஆய்தம், உயிர்மெய் இவற்றை அடுத்து வந்தது.

**குறிப்பு :** குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம் = ஓசை குறுகிய இயல்புடைய உகரம். இது குற்றுகரம் எனப்படும்.

**கு, சு, டு, து, பு, று** என்னும் எழுத்துக்கள் வல்லினக் குற்றெழுத்துக்கள் ஆயினும் இவற்றில் உள்ள உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து அரை மாத்திரையாக ஒலிப்பதால் அவற்றினின்று வேருகக் கொள்ளப்பட்டது. இது மெய்யெழுத்தைச் சார்ந்து உண்டாதலின் **சார்பெழுத்து** எனப்பட்டது.

## (iv) குற்றியலிகரம்

ஆடு + யாது = ஆடியாது. இதில் நிலைமொழியீற்றில் உள்ள குற்றியலுகரம் வருமொழி முதலில் **யா** என்னும் எழுத்து வரும்போது இகரமாகத் திரிந்தது. இவ்வாறு திரிந்து வந்த இகரம் தனக்குரிய மாத்திரையிற் குறைந்து ஒலிக்கும். இது **குற்றியலிகரம்** எனப்படும்.

**வருமொழி முதலில் யகரம் வரும்போது நிலை மொழி யிறுதியில் உள்ள குற்றுகரம் திரிந்து வந்த இகரம் தனக்குரிய மாத்திரையில் குறைந்து ஒலிக்கும். குற்றியலிகரம் ஆகும்.**

**காட்டு :** வீடு + யாது = வீடியாது. எரு**து** + யாது = எரு**தி**யாது.

**குறிப்பு :** குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம்.

கேண்மியா. சென்மியா. என்ற சொற்களில் உள்ள மியா என்னும் முன்னிலையசைச் சொல்லில் மகரத்தின்மேல் நிற்கும் இகரமும் ஓசை குறைந்து ஒலித்தலின் **குற்றியலிகரம்** எனப்படும்.

இவ்விரகம் ஓசை குறைந்தொலிப்பதால் வேறாகக் கொள்ளப் பட்டது. மெய்யைச் சார்ந்து வருதலின் **சார்பெழுத்து** எனப் பட்டது.

## 4. எழுத்தொலியைத் தெரிதல்

தமிழ்மொழியில் ஓரெழுத்தின் ஒலியைப்போல் சிறு சிறு மாறுதல்களுடன் ஒலிக்கும் வேறு எழுத்துக்களும் உள்ளன. சிலர் அவ்வொலி வேற்றுமைகளை உணராமல் ஒலிப்பதால் அவ்வெழுத்துக்கள் பிழையாக ஒலிக்கப்படுகின்றன. ஆதலால், எழுத்துக்களின் ஒலியைத் தெரிந்து, ஒலிக்கும் முறைப்படித் திருத்தமாக ஒலிக்கவேண்டும்.

எழுத்துக்களை ஒலிப்பதற்குரிய முறைகள் அடியில் படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. கண்ணாடி முன் நின்று அவ் வண்ணம் ஒலித்துப் பழகிக்கொள்ளவேண்டும்.




**ர, ற,** இவ்விரண்டெழுத்துக்களுக்கும் ஒலியிலும், பொருளிலும் வேற்றுமையுண்டு.

**ரகரம்**: இது, கண்டத்திலிருந்து பிறப்பது; இடைத் தாமான ஒலியுடைய இடையினத்தைச் சேர்ந்தது.

நாவின் நுனி சற்று மேல் வளைந்து அண்ணத்தைத் தடவ **ர** என்னும் எழுத்தொலி பிறக்கும்.

அண்ணம்—மேல் வாய்.

படத்தில் உள்ளபடி நாவின் நுனியைச் சற்று மேல் வளைத்து அண்ணத்தைத் தடவி **ரகர**த்தை ஒலிக்கவேண்டும்.

**றகரம்**: இது மார்பிலிருந்து—நெஞ்சிலிருந்து பிறப்பது; வல்லோசையுடைய வல்லினத்தைச் சேர்ந்தது.

நாவின் நுனி மேல் வளைந்து அண்ணத்துடன் மிகவும் அழுத்தமாகப் பொருந்த **ற** என்னும் எழுத்தொலி பிறக்கும்.

படத்தில் உள்ளபடி நாக்கின் நுனியை மேல் வளைத்து மேல் வாயுடன் நன்றாய்ப் பொருத்தி **றகர**த்தை ஒலிக்க வேண்டும்.



**ல, ள, ழ** இம்மூன்றெழுத்துக்களும் கண்டத்திலிருந்து தோன்றும் இடையினத்தைச் சேர்ந்தவைகள். ஆயினும், தம் முள் ஒலி வேற்றுமையும், பொருள் வேற்றுமையும் உடையவை.

**ல**கரம்: நாவானது மேல் வளைந்து ஓரம் தடித்து அண்பல் அடியை (மேல் வாய்ப் பல்லின் அடிப்பக்கத்தை) ஒற்ற **ல** என்னும் எழுத்தொலி பிறக்கும்.

படத்தில் உள்ளபடி நாவினை மேல் வளைத்து ஓரம் தடிக்கும்படி மேல்வாய்ப் பல்லின் அடிப்பக்கத்தில் ஒற்றி **ல**கரத்தை ஒலிக்கவேண்டும்.

**ள**கரம்: நாவானது மேல் வளைந்து ஓரம் தடித்து அண்ணத்தைத் தடவ **ள** என்னும் எழுத்தொலி பிறக்கும்.

படத்தில் உள்ளபடி நாவினை மேல் வளைத்து ஓரம் தடிக்கும்படி மேல் வாயைத் தடவி **ள**கரத்தை ஒலிக்கவேண்டும்.

**ழ**கரம்: நாவின் நுனி சற்று மேல் வளைந்து அண்ணத்துடன் இழைந்து தடவ **ழ** என்னும் எழுத்தொலி பிறக்கும்.

படத்தில் உள்ளபடி நாவின் நுனியை மேல்வளைத்து அண்ணத்துடன் இழையும்படித் தடவி **ழ**கரத்தை ஒலிக்க வேண்டும்.




**ந, ன, ண** இம்மூன்றெழுத்துக்களும் மெல்லினத்தைச் சேர்ந்தவையாயினும் தம்முள் ஒலி வேற்றுமையும், பொருள் வேற்றுமையும் உடையவை.

**ந**கரம்: மேல்வாய்ப் பல்லினடிப்பாகத்தை நாவின் நுனி பொருந்த **ந** என்னும் எழுத்தொலி பிறக்கும்.

படத்தில் உள்ளபடி மேல்வாய்ப்பல்லினடியில் நாவின் நுனியைப் பொருத்தி **ந**கரத்தை ஒலிக்கவேண்டும்.

**ன**கரம்: நாவின் நுனி மேல் வளைந்து அண்ணத்துடன் பொருந்த **ன** என்னும் எழுத்தொலி பிறக்கும்.

படத்தில் உள்ளபடி நாவின் நுனியை மேல் வளைத்து மேல் வாயுடன் பொருத்தி **ன**கரத்தை ஒலிக்கவேண்டும்.

**ண**கரம்: நுனி நா நுனி அண்ணத்தில் அழுந்திப் பொருந்த **ண** என்னும் எழுத்தொலி பிறக்கும்.

படத்தில் உள்ளபடி நாவின் நுனியை நுனி அண்ணத்தில் அழுந்தப் பொருத்தி **ண**கரத்தை ஒலிக்கவேண்டும்.

## 5. மாத்திரை

**அ, க. ஆ, கா.** இவற்றுள் **அ, க** என்னும் குற்றெழுத்துக்களைவிட **ஆ, கா** என்னும் நெட்டெழுத்துக்கள் ஓசையில் மிகுந்து ஒலிக்கின்றன.

**குறில்** ஒரு கண்ணிமைப்பொழுது (ஒரு மாத்திரை நேரம்) ஒலிக்கின்றது.

**நெடில்** இரண்டு கண்ணிமைப்பொழுது (இரண்டு மாத்திரை நேரம்) ஒலிக்கின்றது.

மனிதருக்கு இயல்பாக உண்டாகின்ற **கண்ணிமைப்புக்**குரிய கால அளவு அல்லது கை நொடித்தலுக்குரிய கால அளவு ஒரு மாத்திரை நேரமாகும்.

**எழுத்துக்கள் ஒலிக்கின்ற கால அளவு மாத்திரை எனப்படும். குறில் ஒரு மாத்திரை ஒலிக்கும்; நெடில் இரண்டு மாத்திரை ஒலிக்கும்; ஆய்தம் அரை மாத்திரை ஒலிக்கும்; மெய்யும் அரை மாத்திரை ஒலிக்கும்.**

**நன்னூல் : இயல்பெழு மாந்தர் இமைநொடி மாத்திரை.**

## 6. போலி

நல**ம்**—நல**ன்.** கல**ம்**—கல**ன்.**

இச் சொற்களில் மகரமெய் நிற்குமிடத்தில் அதற்குப் பதிலாக னகர மெய் வந்து நின்றும் பொருள் வேறுபடவில்லை.

இவ்வாறு ஒரு சொல்லில் உள்ள ஓரெழுத்திற்குப் பதிலாக மற்றோரெழுத்து வரினும் பொருள் வேறுபடாமல் ஒத்திருப்பது **போலி** எனப்படும்.

போல் + இ = போலி—ஒன்றைப்போல இருப்பது.

**ஒரு சொல்லில் ஓரெழுத்தைப்போல மற்றோரெழுத்து நின்று பொருள் வேறுபடாமல் வருவது போலி ஆகும்.**

**காட்டு :** முக**ம்**–முக**ன்.** மகரத்திற்கு **ன**கரம் போலி.
**நாயிறு–ஞாயிறு. ந**கரத்திற்கு **ஞ**கரம் போலி.

## பயிற்சி

(i) அடியில் வரும் சொற்களில் உள்ள வல்லின, மெல்லின, இடையின மெய்களை எடுத் தெழுதிக் காட்டுக :—

செந்தமிழ்ச்சொல் தித்திக்கும் செங்கரும்பு; கற்கண்டு; கட்டித்தேன் தேர்மின்கள்.

(ii) சுட்டு வினா எழுத்துக்களை எடுத்தெழுதி விளக்குக :—

உழைப்பவர் ஊழையும் உப்பக்கம் காண்பார்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

யார்எது செய்தாலும் ஏன்என்பார் இல்லையோ?
இதுதானா நீதி?

(iii) குற்றியலுகரம், குற்றியலிகரங்களை எடுத்தெழுதி விளக்குக :-

பசு கன்று ஈன்றது. இது உப்பு இட்ட உணவு. சிறு வீடு கட்டு. தீங்கு என்பதைத் தெரிந்து விடு. பஞ்சு நூற்றுப் பழைமையைப் போற்று. இந்நாடியாருடைய நாடு. உனது வீடியாது. சொல்வதைக் கேண்மியா. விரைந்து சென்மியா. அவனது எருதியாது.

## வினாக்கள்

1. முதலெழுத்தின் வகைகளை விளக்குக.
2. சார்பெழுத்துக்களெவை? ஏன் இப்பெயர் பெற்றன?
3. குற்றியலுகரம், குற்றியலிகரம் இவற்றை விளக்கு.
4. ர—ற; ல—ள—ழ; ந—ன—ண —இவற்றை எவ்வாறு ஒலிக்க வேண்டும்?
5. மாத்திரை என்பதியாது? மாத்திரையின் அளவு யாது?
6. எவ்வெவ்வெழுத்துக்கள் எவ்வெவ்வளவு மாத்திரை ஒலிக்கும்?
7. போலி என்பது யாது? இரண்டு காட்டுகள் எழுதுக.

# II. சொல்

**ஆ, ஈ, பூ.** இவ்வெழுத்துக்கள் தனித்தனியே நின்று ஒவ்வொரு பொருளைத் தந்து நின்றன.

**ஆடு, மலர், பட்டம்.** இவற்றில் எழுத்துக்கள் இரண்டு முதலாகத் தொடர்ந்து நின்று ஒவ்வொரு பொருளைத் தந்து நின்றன. இவ்வாறு பொருளைத் தந்து நிற்பது சொல் எனப் படும்.

**எழுத்துக்கள் தனித்து நின்றேனும் இரண்டு முதலாகத் தொடர்ந்து நின்றேனும் பொருளைத் தருமாயின் அது சொல் ஆகும்.**

சொல், மொழி, பதம், கிளவி என்பன ஒரு பொருள் குறித்த பல சொற்கள்.

கை, மை, தை, பை, வா, போ—ஓரெழுத்தொரு மொழிகள்.

அணி, அறம், இன்பம்—பலவெழுத்தொருமொழிகள்.

**குறிப்பு :**—ஓரெழுத்தாய் நிற்பன தம்மை உணர்த்தும்போது எழுத்தாம் ; பிற பொருளை உணர்த்தும்போது சொல்லாம். பொருள் தராத தனி எழுத்தும் தொடர்ந்து வரும் எழுத்துக்களும் சொல் லாதலில்லை.

## 1. பகுபதம், பகாப்பதம்.

சொற்கள்—பதங்கள் **பகுபதம்** என்றும், **பகாப்பதம்** என்றும் இரண்டு வகைப்படும்.

**கூனன், ஊரான், செய்தாள்.** இப் பதங்களை 'கூன் + அன்' என்றும், 'ஊர் + ஆன்' என்றும், 'செய் + த் + ஆள்' என்றும் பிரிக்கலாம். பிரித்தாலும் பகுதி விகுதி முதலியன பொருள் தரும். இவ்வாறு பகுதி விகுதி முதலியனவாகப் பிரிக்கக்கூடிய பதம் **பகுபதம்** எனப் படும்.

பகுதி–முதலில் நிற்பது. மேற்கண்ட சொற்களில் கூன், ஊர், செய் என்பன பகுதிகள். விகுதி—இறுதியில் நிற்பது. அன், ஆன், ஆள் என்பன விகுதிகள்.

கண், பார், படி, எழுது. இப் பதங்கள் பகுதி விகுதி முதலியனவாகப் பிரிக்கமுடியாத பதங்கள். இவை **பகாப் பதம்** எனப்படும்.

பகுபதத்தின் பகுதிகளாகிய கூன், ஊர், செய் முதலி யன மேலும் பகுக்கப்படாமையால் பகாப்பதங்களாகும்.

**பகுதி, விகுதி முதலியனவாகப் பகுக்கக்கூடிய பதம் பகுபதம் ஆகும்; பகுதி, விகுதி முதலியனவாகப் பகுக்க முடியாத பதம் பகாப்பதம் ஆகும்.**

**குறிப்பு :** பகுத்தல் – பிரித்தல். பகாப்பதங்களை மேலும் க+ண், பா+ர், ப+டி எனப் பிரித்தால் அவை பொருள்தரா. ஆதலால், அவ்வாறு பிரித்தலாகாது ; பிரித்தாலும் பகுபதமாகாது.

**நன்னூல்:** **எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்**
**பதமாம்: அது பகாப்பதம் பகுபத மென**
**இருபா லாகி யியலு மென்ப.**

## 2. சொல்வகை

**மாடு, வீடு, மரம், மலர்.**

இச்சொற்கள் பெயர்களைக் குறிக்கும் சொற்கள். ஆதலின், இவை **பெயர்ச் சொற்கள்** எனப்படும்.

**ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச் சொல் ஆகும்.**

மாடு **மேய்ந்தது.** மரம் **வளர்ந்தது.** மலர் **விழுந்தது.** இத் தொடர்களில் உள்ள **மேய்ந்தது, வளர்ந்தது, விழுந்தது** என்ற சொற்கள் மாடு முதலான பொருள்களின் வினைகளை—தொழில்களைக் குறிக்கும் சொற்கள். ஆதலின், இவை **வினைச்சொற்கள்** எனப்படும்.

**ஒரு பொருளின் வினையைக் குறிக்கும் சொல் வினைச் சொல் ஆகும்.**

தந்தை**யோடு** மைந்த**னும்** வந்தான்.

இத் தொடரில் தந்தை, மைந்தன் என்பன பெயர்ச் சொற்கள். வந்தான் என்பது வினைச்சொல். இடையில் வந்துள்ள **ஓடு, உம்** என்பன பெயர்ச் சொற்களும் அல்ல; வினைச் சொற்களும் அல்ல. அவற்றில் ஒன்றைச் சார்ந்து அவற்றை இடமாகக் கொண்டு வந்துள்ளன. ஆதலின், இவை **இடைச் சொற்கள்** எனப்படும்.

**தனித்து வராமல் பெயர் வினைகளை இடமாக அடுத்து வரும் சொல் இடைச்சொல் ஆகும்.**

**உறு** புகழ் பெற்றான். **கழி** மகிழ்வுற்றான். **கடி** நகர்.

இத்தொடர்களில் வந்துள்ள **உறு, கழி, கடி** என்ற சொற்கள் பெயர்ச் சொற்களுமல்ல; வினைச் சொற்களு மல்ல. அவற்றை அடுத்து அவற்றின் குணத்தை உணர்த்தும்

உரிமையுடையனவாக வந்துள்ளன. ஆதலின், இவை **உரிச் சொற்கள்** எனப்படும்.

**தனித்து வராமல் பெயர் வினைகளை அடுத்து அவற்றிற் குரிய குணத்தை உணர்த்திவரும் சொல் உரிச்சொல் ஆகும்.**

உரிச்சொல்—பெயர் வினைகளின் குணத்தை உணர்த்தும் உரிமையுடைய சொல்.

**பெயர்ச் சொல், வினைச் சொல், இடைச் சொல், உரிச் சொல்** எனச் சொல் நான்கு வகைப்படும்.

## 3. பெயர்ச் சொல்

பெயர்களைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள் அறுவகைப் பெயர் முதலாகப் பகுக்கப்படும்.

### (i) அறுவகைப் பெயர்

**பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப் பெயர், குணப்பெயர், தொழிற்பெயர்** என்பன அறுவகைப் பெயர்களாம்.

**மக்கள், மரம், மாடு, கல், பொன்.**

இச் சொற்கள் பொருளுக்குப் பெயராய் வருதலின் **பொருட்பெயர்** எனப்படும்.

**பொருளின் பெயராய் வருவது பொருட்பெயர்.**

**பகல், இரவு, நாள், மாதம், ஆண்டு.**

இச் சொற்கள் காலத்திற்குப் பெயராய் வருதலின் **காலப்பெயர்** எனப்படும்.

**காலத்தின் பெயராய் வருவது காலப்பெயர்.**

**குறிப்பு :** மணி, வினாடி, நிமிடம், கிழமை, வாரம், மாதம். ஆண்டு முதலியனவும் காலப்பெயர்களாம்.

**கால், கை, கண், கொம்பு, இறகு, இலை.**

இச் சொற்கள் உறுப்பிற்குப் பெயராய் வருதலின் **சினைப் பெயர்** எனப்படும்.

**உறுப்பின் பெயராய் வருவது சினைப்பெயர்.**

**செம்மை, கருமை, நன்மை, இனிமை, அன்பு.**

இச் சொற்கள் பண்புக்குப் பெயராய் வருதலின் **பண்புப் பெயர்** எனப்படும்.

**பண்பின் பெயராய் வருவது பண்புப் பெயர்.**

**குறிப்பு :** பண்பு பலவகைப்படும் :
வெண்மை, பசுமை என நிறத்தை உணர்த்துவது **நிறப்பண்பு.**
இனிப்பு, கசப்பு எனச் சுவையை உணர்த்துவது **சுவைப்பண்பு.**
வட்டம், சதுரம் என வடிவை உணர்த்துவது **வடிவப்பண்பு.**
அன்பு, கொடுமை எனக் குணத்தை உணர்த்துவது **குணப்பண்பு.**

**படித்தல், எழுதுதல், போக்கு, வருகை.**

இச் சொற்கள் தொழிலுக்குப் பெயராய் வருதலின் **தொழிற்பெயர்** எனப்படும்.

**தொழிலின் பெயராய் வருவது தொழிற்பெயர்.**

தொழிற்பெயர்கள் **தல், அல், கல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, இ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, அடம், அணம், அரம், மதி, ஆனை, மை, து** என்பவை களுள் ஒன்றை விகுதியாகப் பெற்றுவரும்.

**காட்டு :** செய்**தல்**, உண்**ணல்**, கொடுக்**கல்**, ஓட்**டம்**, கொ**லை**, செய்**கை**, கோ**வை**, போக்**கு**, நட்**பு**, செல**வு**, வெகு**ளி**, மற**தி**, கிளர்ச்**சி**, கல்**வி**, செய்**யுள்**, சாக்**காடு**, கோட்**பாடு**, தோற்**றரவு**(தோன்றல்), கட்**டடம்**, கட்**டணம்**,

விளம்**பரம்,** ஏற்று**மதி,** வா**ரானை** (வருதல்), நடவா**மை,** பாய்**த்து** (பாய்தல்).

தொழிற்பெயர் விகுதி பெருமல் பகுதி மாத்திரமாய் வரின் **முதனிலைத் தொழிற்பெயர்** என்றும், பகுதி திரிந்து வரின் **முதனிலை திரிந்த தொழிற்பெயர்** என்றும் கூறப் படும்.

**காட்டு :** **பிடி** தவறியது. **உரை** கேட்டான்.

இவை முறையே பிடித்தல், உரைத்தல் எனப் பொருள் படும். இவை முதனிலைத் தொழிற் பெயர்கள்.

**வீடு** பெற்ருன். **கேடு** நீங்கிற்று.—இவற்றுள், **வீடு** என்பது விடு என்னும் பகுதி திரிந்து வந்தது. விடுதல் எனப் பொருள்படும். (வீடு பெற்ருன்—விடுதலை பெற்ருன்.)

**கேடு** என்பது கெடு என்னும் பகுதி திரிந்து வந்தது. கெடுதல் எனப் பொருள்படும். (கேடு நீங்கிற்று—கெடுதல் நீங்கிற்று) இவை முதனிலை திரிந்த தொழிற்பெயர்கள்.

## வினையாலணையும் பெயர்

படித்தான். **படித்தானைப்** பாராட்டுவர்.

இவற்றுள் படித்தான் என்ற வினைமுற்றுச் சொல், படிக்கும் தொழிலைச் செய்தான் என வினை முற்றுப்பெற்ற மையை உணர்த்துகிறது. இது வினைமுற்ருகும்.

**படித்தானை** (படித்தான் + ஐ) என்பதில் உள்ள **படித் தான்** என்னும் வினைமுற்றுச் சொல் வினை முற்றுப்பெற்ற மையை உணர்த்தாமல், அவ்வினைக்குரியவனை (படிக்கும் தொழிலைச் செய்தவனை) உணர்த்துகிறது மேலும் **ஐ** என்னும் இரண்டாம் வேற்றுமை உருபை ஏற்று வருகின்றது.

இவ்வாறு வருவது **வினையாலணையும் பெயர்** எனப்படும்.

**ஒரு வினைமுற்று வினையை உணர்த்தாது வினைக்குரிய பொருளை உணர்த்தும் பெயராகி வேற்றுமையை ஏற்றுவரின் அது வினையாலணையும் பெயர் ஆகும்.**

வினையாலணையும் பெயர் இயல்பாய் வருதலன்றி ஈறு திரிந்து வருதலும் உண்டு.

**காட்டு:** வந்தானைக்கண்டேன்—வந்தான் என இயல்பாய் நின்று உருபேற்று வந்தது.

வந்தவனைக் கண்டேன்—வந்தான் என்ற சொல் வந்தவன் என ஈறு திரிந்து உருபேற்று வந்தது.

**குறிப்பு:** காலத்தைக் காட்டுவது வினையின் தன்மை. வேற்றுமையை ஏற்றுவருவது பெயரின் தன்மை. இவ்விரு தன்மைகளையும் ஏற்று வருவதால் வினையாலணையும் பெயர் எனப்பட்டது.

## தொழிற் பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் உள்ள வேறுபாடுகள்

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| 1. தொழிலுக்குப் பெயராய் வருவது. | 1. தொழிலையுடைய பொருளுக்குப் பெயராய் வருவது. |
| 2. பெரும்பாலும் காலம் காட்டாது. | 2. காலம் காட்டும். |
| 3. படர்க்கை இடத்திற்கே உரியது. | 3. மூவிடங்களுக்கும் உரியது. |

## ஆகு பெயர்

தலைவணங்கு. **தலை**க்கு ஒரு அணா கொடு. இவற்றில் முதல் தொடரில் வந்துள்ள 'தலை' என்ற சொல் ஒரு உறுப்பினைக் குறிக்க வந்த பெயர். இஃது இயற்பெயர் அல்லது உரிய பெயர் எனப்படும்.

இரண்டாவது தொடரில் வந்துள்ள **தலை** என்ற சொல் தலைக்குரிய மனிதனைக் குறிக்க வந்த பெயர். தலையோடு தொடர்புடைய மனிதனுக்கு ஆகிவந்தது. இவ்வாறு ஒன்றன் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்கு ஆகிவருவது **ஆகுபெயர்** எனப்படும்.

**ஒன்றன் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்குப் பெயராகி வருவது ஆகுபெயர் ஆகும்.**

**குறிப்பு:** ஆகிவருவது–ஆகுபெயர். ஒன்றன் பெயர் மற்றொன்றிற்கு ஆகிவரும்போது இரண்டிற்கும் ஏதாவது ஒரு வகையில் தொடர்பு அமைந்திருக்கவேண்டும்.

**காட்டு:** உண்பது **நாழி**. **நாழி** என்பது நாழியளவு கொண்ட அரிசியின் உணவுக்கு ஆகிவந்தது.

**ஊர்** அடங்கிற்று. **ஊர்** என்பது ஊரில் உள்ள மக்களுக்கு ஆகிவந்தது.

**வெள்ளை** அடித்தான். **வெள்ளை** என்பது வெள்ளை நிறமுடைய சுண்ணத்திற்கு ஆகிவந்தது.

### (ii) திணை, பால், எண், இடம், வேற்றுமை.

பெயர்ச் சொற்களில் **திணை, பால், எண், இடம், வேற்றுமை** என்னும் இவ்வைந்தையும் அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

## திணை

1. **மண், கல், கட்டை, இரும்பு.**
2. **மரம், புழு, பசு, பறவை.**
3. **மனிதன், அரசன், புலவன், முருகன்.**

**மண்** முதலான பெயர்கள் உயிரில்லா—அறிவில்லாப் பொருள்களைக் குறிக்கின்றன.

**மரம்** முதலான பெயர்கள் உயிருள்ளவைகளில் ஓரறிவு முதல் ஐயறிவு வரையுள்ள பொருள்களைக் குறிக்கின்றன.

**மனிதன்** முதலான பெயர்கள் ஐயறிவினும் உயர்ந்த பகுத்தறிவென்னும் ஆறுவது அறிவுமுடைய பொருள்களைக் குறிக்கின்றன.

தமிழ் இலக்கண நூலார் உலகில் உள்ள பொருள்களில் உயர்ந்த அறிவுடைய பொருள்களை **உயர்திணை** எனவும், உயர்வு அல்லாத அறிவுடைய பொருள்களை **அஃறிணை** எனவும் இருவகையாகப் பிரித்துள்ளார்கள். திணை - வகுப்பு, உயர்திணை - உயர்ந்த அறிவுடைய வகுப்பு. அல் + திணை = அஃறிணை. அல் + திணை—உயர்வல்லாத அறிவுடைய வகுப்பு.

**பொருள்களின் அறிவைக் கொண்டு அறிவுடையோர் வகுத்த வகுப்பு திணை எனப்படும்; அது உயர்திணை, அஃறிணை என இரு வகைப்படும்.**

### உயர்திணை

**பொன்னன், பொன்னி, திருவள்ளுவர், ஔவையார்.** இவர்கள் உயர்ந்த அறிவுடைய மக்கள்.

**முருகன், திருமால், சிவன், திருமகள், உமையவள்.** இவர்கள் தெய்வப் பண்புடைய கடவுளர்—தேவர்கள். இவர்கள் **உயர்திணை**யைச் சார்ந்தவர்களாவார்கள்.

**பகுத்தறிவுடைய மக்களும் தேவர்களும் உயர்திணையாவர்.**

### அஃறிணை

**புல், நத்தை, எறும்பு, வண்டு, விலங்கு, பறவை.**

இவை உயிருள்ள பகுத்தறிவற்ற பொருள்கள்.

**கல், மண், நீர், நிலம், கத்தி, விறகு.**

இவை உயிரற்ற பொருள்கள். இவை **அஃறிணை**யைச் சார்ந்தவைகளாம்.

**பகுத்தறிவற்ற உயிருள்ள பொருள்களும் உயிரில்லாத பொருள்களும் அஃறிணையாம்.**

**குறிப்பு :** மனிதன் என்ற சொல் உயர்திணையைச் சார்ந்ததாயினும் உயிரையும், உடலையும் தனித்தனிப் பிரித்துக் கூறும் போது அஃறிணையாகும்.

கடவுள், தெய்வம் முதலான சில சொற்கள் உயர்திணையாகவும், அஃறிணையாகவும் வழங்கப்படும்.

**காட்டு :** உயிர் சென்றது. உடல் கிடந்தது.
கடவுள் இருக்கிறார். தெய்வம் இருக்கிறது.
சூரியன் உதித்தான். சூரியன் உதித்தது.

**நன்னூல் : மக்கள் தேவர் நரகர் உயர்திணை**
**மற்றுயி ருள்ளவும் இல்லவும் அஃறிணை.**

### பால்

திணையின் உட்பிரிவு **பால்** எனப்படும். அஃது ஐந்து வகைப்படும்.

**முருகன், தலைவன், உழவன்.** இப்பெயர் ஒவ்வொன்றும் உயர்திணையில் ஒரு ஆணைக் குறிக்கும். ஆதலால், **ஆண்பால்** எனப்படும்.

**பொன்னி, தலைவி, உழத்தி.** இப்பெயர் ஒவ்வொன்றும் உயர்திணையில் ஒரு பெண்ணைக் குறிக்கும். ஆதலால், **பெண்பால்** எனப்படும்.

**ஆடவர், மகளிர், மக்கள், பெற்றோர்.** இப்பெயர்கள் ஒவ்வொன்றும் ஆண்களில் பலரையும், பெண்களில் பலரையும், இருவரும் சேர்ந்த பலரையும் குறிக்கும். ஆதலால், **பலர்பால்** எனப்படும்.

**உயர்திணையில் ஒரு ஆணைக் குறிப்பது ஆண்பாலாகும்; ஒரு பெண்ணைக் குறிப்பது பெண்பாலாகும்; ஆண்களாயினும், பெண்களாயினும், ஆண் பெண் கலந்திருப்பினும் ஒன்றுக்கு மேற்பட்ட பலரைக் குறிப்பது பலர்பால் ஆகும்.**

**மரம், மாடு, வீடு.** இப்பெயர்கள் ஒவ்வொன்றும் அஃறிணையில் ஒரு பொருளைக் குறிக்கும். ஆதலால், **ஒன்றன்பால்** எனப்படும்.

**மரங்கள், மாடுகள், வீடுகள்.** இப்பெயர்கள் ஒவ்வொன்றும் அஃறிணையில் பல பொருள்களைக் குறிக்கும். ஆதலால், **பலவின்பால்** எனப்படும்.

**அஃறிணையில் ஒரு பொருளைக் குறிப்பது ஒன்றன்பாலாகும்; பல பொருள்களைக் குறிப்பது பலவின் பாலாகும்.**

குறிப்பு : ஐந்து பால்களில் ஆண்பால், பெண்பால், பலர்பால் மூன்றும் உயர்திணைக்குரியன ; ஒன்றன்பால், பலவின்பால் இரண்டும் அஃறிணைக்குரியன.

அஃறிணையில் களிறு - பிடி. சேவல் - பெடை எனச் சில பொருள்களில் ஆண் பெண்களுக்குத் தனிச்சொற்கள் இருந்தாலும், எல்லாப் பொருள்களுக்கும் இவ்வாறு இன்மையால் ஆண் பெண் எனக் கொள்ளாது பொதுவாக ஒன்றன்பால் பலவின்பால் எனக் கொள்ளப்பட்டது.

நூ-ல் : **ஆண் பெண் பலரென முப்பாற் றுயர்திணை.**
**ஒன்வே பலவென் றிருபாற் றஃறிணை.**

## எண்

பொருள்களின் எண்ணிக்கையை உணர்த்துவது **எண்** ஆகும். அஃது **ஒருமை, பன்மை** என இருவகைப்படும்.

**கல், மரம், புத்தகம், மனிதன்.** இச் சொற்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளைக் குறித்தலால் **ஒருமை** எனப்படும்.

**கற்கள், புத்தகங்கள், மனிதர்கள்.** இச்சொற்கள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள்களைக் குறித்தலால் **பன்மை** எனப்படும்.

**ஒரு பொருளைக் குறிப்பது ஒருமையாகும். ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள்களைக் குறிப்பது பன்மையாகும்.**

**குறிப்பு :** ஐந்து பால்களுள் ஆண்பால், பெண்பால், ஒன்றன் பால் ஆகிய மூன்றும் ஒருமைக்குரியன. பலர்பால், பலவின்பால் ஆகிய இரண்டும் பன்மைக்குரியன.

## இடம்

**நான் நீ** கூறியபடி **அவன் புத்தகத்தை** வாங்கினேன். இத் தொடரில் பேசுவோன் **நான்** என்ற சொல்லால் தன்னையும், **நீ** என்ற சொல்லால் முன் நிற்பவனையும், **அவன், புத்தகம்** என்ற சொற்களால் வேறிடத்துள்ள வேறு பொருள்களையும் குடுப்பிடுகின்றான். இவ்வாறு குறிப்பிடுவது **இடம்** எனப்படும்.

**பேசுவோன் தன்னையும் தன்னைச் சார்ந்தவரையும் குறிப்பது தன்மை இடம் ஆகும்.**

**முன் நிற்போனையும் அவனைச் சார்ந்தவரையும் குறிப்பது முன்னிலை இடம் ஆகும்.**

**தன்மை முன்னிலைகள் அல்லாத மற்ற யாவற்றையும் குறிப்பது படர்க்கை இடம் ஆகும்.**

**தன்மை, முன்னிலை, படர்க்கை** என இடம் மூன்று வகைப்படும். மூவிடப் பெயர்கள் ஒருமை பன்மை என இருவகைப்படும்.

| | **ஒருமை** | **பன்மை** |
|---|---|---|
| தன்மை— | நான், யான். | நாம், யாம், நாங்கள், யாங்கள். |
| முன்னிலை— | நீ. | நீர், நீயிர், நீவிர், நீங்கள். |
| படர்க்கை— | அவன், அவள், அது. | அவர், அவை. |

**நன்னூல் : தன்மை முன்னிலை படர்க்கை மூவிடனே.**

## வேற்றுமை

**மரம். மரம்** வளர்ந்தது. **மரத்தை** அறுத்தான். **மரத்தால்** நாற்காலி செய்தான். இவற்றில் மரம் என்ற ஒரு பெயர்ச்சொல் வேறு வேறு பொருள்களில் வந்துள்ளது.

**மரம்** என்பது பெயரை உணர்த்தும் இயல்பான பெயர்ச் சொல்லாய் நின்றது.

**மரம்** வளர்ந்தது. இதில் மரம் என்ற சொல் வளர்ந்தது என்னும் பயனிலைக்கு எழுவாய் ஆக வேறுபட்டது.

**மரத்தை** அறுத்தான். இதில் மரம் என்ற சொல் **ஐ** என்னும் உருபை ஏற்று செயப்படு பொருளாக வேறுபட்டது.

**மரத்தால்** நாற்காலி செய்தான். இதில் மரம் என்ற சொல் **ஆல்** என்னும் உருபை ஏற்று கருவிப் பொருளாக வேறுபட்டது.

இவ்வாறு பெயர்ப் பொருளை வேறுபடுத்துவது **வேற்றுமை** எனப்படும்.

**பெயர்ப் பொருளை எழுவாய்ப் பொருள் முதலாக வேறுபடுத்துவது வேற்றுமை ஆகும். அது எட்டு வகைப்படும்.**

வேற்றுமைப் பொருளை அறிவிக்கவரும் உருபுகள் **வேற்றுமை உருபுகள்** எனப்படும். அவை, பெயர்ச் சொற்களின் இறுதியில் பெயர்களுடன் சேர்ந்து வரும்.

**முதல் வேற்றுமை :** இயல்பான பெயர்ச்சொல் ஒரு வாக்கியத்தில் எழுவாயாக வருவது முதல் வேற்றுமையாகும். இது **எழுவாய் வேற்றுமை** எனவும் பெயர்பெறும்.

முதல் வேற்றுமைக்குப் பெயருடன் சேர்ந்துவரும் உருபுகள் இல்லை. எனினும், 'ஆனவன், ஆனவள், ஆனவர், ஆனது, ஆனவை ; என்பவன், என்பவள், என்பவர், என்பது, என்பவை, முதலியன பெயருக்குப் பின் சொல்லுருபுகளாக வரும்.

சொல்லுருபு—உருபுக்குப் பதிலாக சொல்லே உருபாய் வருவது.

**காட்டு :** முருகன் வந்தான். உருபு பெறுமல் வந்தது.

முருகன் **ஆனவன்** வந்தான். முருகன் **என்பவன்** வந்தான்.

ஆனவன் முதலானவை பெயர்களுக்குப் பின் சொல்லுருபுகளாக வந்தன. இவ்வாறே பிற உருபுகளும் வரும்.

**இரண்டாம் வேற்றுமை :** இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ ஆகும்

**காட்டு :** தச்சன் பெட்டி**யை**ச் செய்தான்.

உழவன் நில**த்தை** உழுதான்.

**மூன்றாம் வேற்றுமை :** மூன்றாம் வேற்றுமையின் உருபுகள் **ஆல், ஆன், ஒடு, ஓடு** என்பன.

**உடன், கொண்டு** என்பவை மூன்றாம் வேற்றுமையின் சொல்லுருபுகளாக வரும்.

**காட்டு :** கோடரி**யால்** வெட்டினான்.
அறத்**தான்** வருவதே இன்பம்.
அவ**னொடு** இவனும் வந்தான்.
கல்வி**யோடு** அறிவும் வளரும்.
} **ஆல், ஆன் ஒடு, ஓடு** உருபுகள்.

தந்தையு**டன்** மைந்தனும் வந்தான்.
வாள் **கொண்டு** வெட்டினான்.
} **உடன், கொண்டு** சொல்லுருபுகள்.

**நான்காம் வேற்றுமை :** நான்காம் வேற்றுமையின் உருபு **'கு'** ஆகும். **பொருட்டு, நிமித்தம்** என்பவை நான்காம் வேற்றுமையின் சொல்லுருபுகளாக வரும். **ஆக** என்பது **கு** என்னும் உருபுடன் சேர்ந்து சொல்லுருபாக வரும்.

**காட்டு :** ஏழைகளுக்**கு** உணவளித்தான். **கு** உருபு.

கூலியின் **பொருட்டு** வேலை செய்தான்.
பிழைப்பு **நிமித்தம்** வெளியூர் சென்றான்.
} **பொருட்டு, நிமித்தம்** சொல்லுருபுகள்.

உனக்**காக** இதைக் கொடுத்தேன். } **கு-ஆக** சேர்ந்து வந்தன.

**ஐந்தாம் வேற்றுமை :** ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் **இன், இல்** என்பன. **நின்று, இருந்து** என்பவை ஐந்தாம் வேற்றுமையின் சொல்லுருபுகளாக வரும். இவற்றில் **இன்** என்னும் உருபோடு **நின்று** என்பதும், **இல்** என்னும் உருபோடு **இருந்து** என்பதும் சேர்ந்து வரும்.

**காட்டு :** பாலின் வெண்மையானது கொக்கு. } **இன், இல்**
அறிவில் பெரியவர் திருவள்ளுவர். } உருபுகள்.

காட்டினின்று வந்தான். } **இன்** உருபுடன் **நின்றும், இல்** உருபுடன் **இருந்தும்** சேர்ந்து வந்தன.
வீட்டிலிருந்து சென்றான்.

**ஆறாம் வேற்றுமை :** ஆறாம் வேற்றுமையின் உருபுகள் **அது, ஆது, அ** என்பன. **உடைய** என்பது ஆறாம் வேற்றுமையின் சொல்லுருபாக வரும்.

**காட்டு :** நமது நாடு (நம் + அது) } **அது, ஆது, அ** உருபுகள்.
எனது கை (என் + ஆது)
தன கால்கள் (தன் + அ)

உன்னுடைய புத்தகம் – **உடைய** சொல்லுருபு.

**ஏழாம் வேற்றுமை :** ஏழாம் வேற்றுமையின் உருபுகள் **இல், கண், இடம்** முதலானவைகள்.

**காட்டு :** பெட்டியில் புத்தகம் இருக்கிறது. } **இல், கண், இடம்** உருபுகள்.
மனத்தின் **கண்** மாண்பு வேண்டும்.
பெரியோரிடம் பணிவாய் நட.

**எட்டாம் வேற்றுமை :** படர்க்கைப் பெயர்கள் விளித்தல் பொருளில் வரும்போது எட்டாம் வேற்றுமை எனப்படும். இது **விளி வேற்றுமை** எனவும் பெயர் பெறும்.

விளித்தல் — அழைத்தல், கூப்பிடுதல்.

பெயர்கள் விளி வேற்றுமையில் வரும்போது இயல்பாகவும், இறுதியில் சில மாறுபாடுகளைப் பெற்றும் வரும்.

**காட்டு :** **தம்பி !** இங்கே வா. இயல்பாய் வந்தது.
**மகனே !** பள்ளிக்குச்செல். ஈற்றில் **ஏ** மிகுந்தது.
**செல்வ !** நல்வழி நில். ஈற்றில் **ன்** கெட்டது.
**அன்னாய் !** என்னைப்பார். ஈற்றில் **ஐ, ஆய்** எனத் திரிந்தது.

### பயிற்சி

(i) அடியில் வரும் தொடர்களில் உள்ள பகுபதம், பகாப் பதங்களைத் தனித்தனியே எடுத்தெழுதிப் பகுபதங்களைப் பிரித்து எழுதிக் காட்டுக :—

முருகன் பாடம் படித்தான்.
உறையூரான் உடை நெய்தான்.
கூனி வேலை செய்தாள்; கூலி வாங்கினாள்.
கண்ணன் வெண்ணெய் தின்றான்.
அணுகுண்டால் மிகுதியான கெடுதி விளையும்.
அறிஞர்கள் உலக அமைதியை விரும்புகிறார்கள்.

(ii) அடியில் வரும் தொடர்களில் உள்ள அறுவகைப் பெயர்கள், வினையாலணையும் பெயர்கள், ஆகு பெயர்கள் இவற்றை எடுத்தெழுதி விளக்குக :—

கந்தன் காலையில் பள்ளிக்குச் சென்றான்.
மாலையில் விளையாடுதல் கைகால்களுக்கு உரம் தரும்.
கருமையான எருமை கழனியில் நின்றது.
கெடுதல் செய்தால் கேடு உண்டாம்.
இருந்தவன் எழுந்தான்; நின்றவன் சென்றான்.
வந்தானைக் கண்டு வணங்கி நின்றான்.
முயன்று படித்தான்; முதன்மையாய்த் தேறினான்.
தலைக்கு நாழி தானியம் கொடுத்தான்.
வீட்டைத் துடைத்து வெள்ளையடித்தான்.
உலைவாயை மூடலாம்; ஊர்வாயை மூடலாகாது.

(iii) அடியிற்கண்ட தொடர்களில் வரும் சொற்களுக்குத் திணை, பால், எண், இடம், வேற்றுமைகளை எழுது :—

திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.
வேலன் கோடரியால் மரத்தை வெட்டினான்.
பொன்னி வள்ளியோடு வந்தாள்.

மாட்டிற்குத் தீனி வைத்தான்.
உறவினர்கள் ஊரிலிருந்து வந்தார்கள்.
எனது புத்தகம் பெட்டியில் இருக்கிறது.
தாயே! வருக. மகனே! வாழ்க.

## வினாக்கள்

1. பதம் எத்துணை வகைப்படும்? விளக்குக.
2. சொற்கள் எத்துணை வகைப்படும்? விளக்குக.
3. அறுவகைப் பெயர்கள் யாவை? காட்டுடன் எழுதுக.
4. தொழிற்பெயர் விகுதிகள் எவை? விகுதிகளை அமைத்துத் தொழிற்பெயர்களை எழுது.
5. முதனிலைத் தொழிற்பெயர், முதனிலை திரிந்த தொழிற்பெயர் இவற்றைக் காட்டுடன் விளக்கு.
6. வினையாலணையும் பெயரின் தன்மை யாது? காட்டுடன் விளக்குக. ஏன் இப்பெயர் பெற்றது?
7. திரிந்துவந்த வினையாலணையும்பெயரைக் காட்டுடன் விளக்குக.
8. தொழிற்பெயர்க்கும், வினையாலணையும்பெயர்க்கும் உள்ள வேற்றுமையை விளக்கி எழுதுக.
9. ஆகுபெயர் என்பது யாது? இரண்டு காட்டுகளுடன் எழுது.
10. திணை எத்துணை வகைப்படும்? காட்டுடன் எழுது.
11. பால் எத்துணை வகைப்படும்? காட்டுடன் எழுது.
12. இடம் எத்துணை வகைப்படும்? காட்டுடன் எழுது.
13. வேற்றுமை என்பது யாது? அது எத்துணை வகைப்படும்?
14. இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரைக்கும் உள்ள வேற்றுமை உருபுகளைத் தனித்தனியே எழுதிக் காட்டுடன் விளக்குக.
15. எட்டாம் வேற்றுமை என்பது யாது? அது எவ்வெவ்வாறு வரும்?

## 4. வினைச் சொல்

முருகன் பள்ளிக்குச் **சென்ருன்**. பாடம் **படித்தான்**. இதில் **சென்ருன், படித்தான்** என்ற சொற்கள் முருகன் செய்த செயலை - தொழிலை உணர்த்துகின்றன. இவ்வாறு பொருளின் தொழிலை உணர்த்தும் சொல் **வினைச்சொல்** எனப்படும். வினை, செயல், தொழில் என்பன ஒரு பொருளைத் தரும் சொற்கள்.

**பொருளின் தொழிலை உணர்த்தும் சொல் வினைச்சொல் ஆகும்.**

(i) **வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம்.**

தச்சன் நாற்காலி **செய்தான்**.

தச்சன் நாற்காலி **செய்து** விற்ருன்.

தச்சன் **செய்த** நாற்காலி இது.

இத்தொடர்களில் வந்துள்ள **செய்தான், செய்து, செய்த** என்ற மூன்றும் வினைச்சொற்களே யாகும். ஆயினும், செய்தான் என்னும் வினைச்சொல் பொருள் முடிந்து நிற்கின்றது. தொழில் முற்றுப் பெற்றதைக் குறிக்கின்றது. இவ்வாறு பொருள் முடிந்து நிற்கும் வினைச்சொல் **வினைமுற்று** அல்லது **முற்றுவினை** எனப்படும்

**செய்து, செய்த** என்னும் வினைச் சொற்கள் பொருள் முடிவு பெருமல்—தொழில் முற்றுப் பெருமல் எச்சமாக நிற்கின்றன. இவ்வாறு பொருள் முற்றுப்பெருமல் நிற்கும் வினைச்சொல் **எச்சவினை** எனப்படும்.

எச்சம்—குறைவு. முற்றுப் பெருமல் குறைவாய் நின்று, வேறு சொல்லைக்கொண்டு முடிவது எச்சம் ஆகும்.

**வினைச் சொற்களில் பொருள் முற்றுப்பெற்று நிற்பது முற்றுவினையாகும்; பொருள் முற்றுப் பெருமல் எச்சமாக நிற்பது எச்சவினையாகும்.**

**எச்சவினை—பெயரெச்சம், வினையெச்சம்.**

**வந்த** பையன். **உண்டு** சென்றான்.

இத்தொடர்களில் **வந்த** என்ற சொல் முற்றுப்பெறாமல் எச்சமாக நின்று, **பையன்** என்ற பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிந்தது. இவ்வாறு எச்சமாக நின்று பெயரைக் கொண்டு முடிவது **பெயரெச்சம்** எனப்படும்.

**உண்டு** என்ற சொல் முற்றுப்பெறாமல் எச்சமாக நின்று, **சென்றான்** என்ற வினைச் சொல்லைக் கொண்டு முடிந்தது. இவ்வாறு எச்சமாக நின்று வினையைக்கொண்டு முடிவது **வினையெச்சம்** எனப்படும்.

**முற்றுப்பெறாமல் எச்சமாக நின்று பெயரைக்கொண்டு முடிவது பெயரெச்சம் ஆகும். முற்றுப்பெறாமல் எச்சமாக நின்று வினையைக்கொண்டு முடிவது வினையெச்சம் ஆகும்.**

பெயரெச்சம், வினையெச்சம் என எச்ச வினை இருவகைப் படும்.

**(ii) எதிர்மறை வினை, உடன்பாட்டு வினை.**

முருகன் **படித்தான்; எழுதுகின்றான்; சொல்வான்.**

வேலன் **படித்திலன்; எழுதுகின்றிலன்; சொல்லான்.**

இத்தொடர்களில் **படித்தான்** முதலான வினைச் சொற்கள் தொழிலின் நிகழ்ச்சியைத் தெரிவிக்கின்றன. இவ்வாறு தொழிலின் நிகழ்ச்சியைத் தெரிவிக்கும் வினை **உடன்பாட்டு வினை** எனப்படும்.

**படித்திலன்** முதலான சொற்கள் தொழில் நிகழாமையைத் தெரிவிக்கின்றன. இவ்வாறு தொழில் நிகழாமையைத் தெரிவிக்கும் வினை **எதிர்மறை வினை** எனப்படும்.

**தொழில் நிகழ்ச்சியை உணர்த்தும் வினை உடன்பாட்டு வினை ஆகும்; தொழில் நிகழாமையை உணர்த்தும் வினை எதிர்மறைவினை ஆகும்.**

உடன்பாட்டு வினை **விதிவினை** எனவும், எதிர்மறை வினை **மறைவினை** எனவும் பெயர் பெறும்.

### எதிர்மறை எச்சங்கள்

**எதிர்மறைப் பெயரெச்சம் : படியாத** பையன்; **கல்லாத நாள்.**

இத் தொடர்களில் வந்துள்ள **படியாத, கல்லாத** என்னும் பெயரெச்சங்கள் எதிர்மறையை உணர்த்துகின்றன. இவ்வாறு எதிர்மறையில் வரும் பெயரெச்சம் **எதிர்மறைப் பெயரெச்சம்** எனப்படும்.

படியாப் பையன் (படியா(த) பையன்) கல்லா நாள் (கல்லா(த) நாள்) இவ்வாறு எதிர்மறைப் பெயரெச்சம் ஈறு கெட்டு நிற்றலும் உண்டு. இவ்வாறு வருவது **ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்** எனப்படும்.

**எதிர்மறையை உணர்த்தும் பெயரெச்சம் எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும். அது ஈறு கெட்டுவரின் ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும்.**

**எதிர்மறை வினையெச்சம் : கல்லாது** கெட்டான். **உண்ணுமல்** சென்ருன்.

இவற்றில் **கல்லாது, உண்ணுமல்** என்னும் வினையெச்சங்கள் எதிர்மறையை உணர்த்துகின்றன. இவ்வாறு எதிர்மறையில் வரும் வினையெச்சம் **எதிர்மறை வினையெச்சம்** எனப்படும்.

**உண்ணுச்** சென்ருன் (உண்ணு(து) சென்ருன்). இவ்வாறு எதிர்மறை வினையெச்சம் ஈறு கெட்டு வருதலும் உண்டு.

இவ்வாறு வருவது **ஈறு கெட்ட எதிர்மறை வினையெச்சம்** எனப்படும்.

**எதிர்மறையை உணர்த்தும் வினையெச்சம் எதிர்மறை வினையெச்சம் ஆகும். அது ஈறு கெட்டு வரின் ஈறு கெட்ட எதிர்மறை வினையெச்சம் ஆகும்.**

எதிர்மறை எச்சம் எதிர்மறைப் பெயரெச்சம், எதிர் மறை வினையெச்சம் என இருவகைப்படும்.

**பயிற்சி**

(i) அடியில் வரும் தொடர்களில் உள்ள வினைமுற்றுக்கள், பெயரெச்ச வினையெச்சங்கள், எதிர்மறை வினைமுற்றுக்கள், எதிர் மறைப் பெயரெச்ச வினையெச்சங்கள் இவற்றைத் தனித்தனியே எடுத்தெழுதி விளக்குக :—

வேலன் செய்த பெட்டி இது.
கந்தன் பெட்டி செய்து முடித்தான்.
உண்ட பையன் படுத்து உறங்கினன்.
பொன்னி படித்த பாடத்தைப் பார்த்து எழுதினள்.
முருகன் உண்டான் ; சென்றான்.
வேலன் உண்டிலன் ; சென்றிலன்.
வள்ளி வந்தாள் ; செல்வி வந்திலள்.
கண்ணன் செய்திலன் ; கந்தன் செய்தனன்.
படியா மாணவன் தேர்வில் தெளிவாய் எழுதான்.
கல்லா நாட்கள் பொல்லா நாட்கள்.
உண்ணாக் கிடந்தான் ; உடல்நல மிழந்தான்.

(ii) அடியில் வரும் உடன்பாட்டுவினைகளை எதிர்மறை வினைக ளாகவும், எதிர்மறை வினைகளை உடன்பாட்டு வினைகளாகவும் மாற்றி எழுதுக :—

வள்ளி படித்தாள். வேலன் நூலை நூற்றான்.
பாலன் பாடம் எழுதுகிறான் ; செய்யுள் படித்திலன்.
செல்வன் கடைக்குச் சென்றிலன் ; புத்தகம் வாங்கிலன்.

**வினாக்கள்**

1. முற்றுவினை, எச்சவினைகளைக் காட்டுடன் விளக்கு.

2. பெயரெச்சம், வினையெச்சங்களேவை? காட்டுடன் விளக்கு.

3. உடன்பாட்டு வினைமுற்று, எதிர்மறை வினைமுற்று இவற்றைக் காட்டுடன் விளக்கி எழுது.

4. எதிர்மறைப் பெயரெச்ச, வினையெச்சங்களைக் காட்டுடன் விளக்கு.

5. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்ச, வினையெச்சங்களைக் காட்டுடன் விளக்கு.

---

## 5. இடைச்சொல்

பெயர்ச்சொற்களும், வினைச்சொற்களும் தனித்தனியே நின்று பொருளுணர்த்தும் தன்மையுடையன. சில சொற்கள் அவ்வாறு தனித்தனியே நின்று பொருளையுணர்த்தாமல், பெயர் வினைகளைச் சார்ந்துவரும் தன்மையுடையன. அவை **இடைச்சொல்** எனப் பெயர்பெறும்.

1. முருக**னது** வீடு; கந்த**னோடு** வந்தான்.

**அது, ஒடு** என்னும் **வேற்றுமை உருபுகள்** தனித்து வராமல் சொற்களின் இடையில் வந்தன.

2. படிக்கிறுன். (படி + **கிறு** + ஆன்) பாடினுள் (பாடு + **இன்** + ஆள்)

**ஆன், ஆள்** என்னும் **விகுதிகளும்**; **கிறு, இன்** என்னும் இடைநிலைகளும் தனித்து வராமல் படி, பாடு என்னும் வினைப் பகுதிகளை அடுத்து இடையிலும் கடையிலும் வந்தன.

3. புளியங்காய் (புளி + **அம்** + காய்)
மரத்தில் (மரம் + **அத்து** + இல்)

**அம், அத்து** என்னும் **சாரியைகள்** தனித்து வராமல் இடையில் வந்தன.

4. புலி**போலப்** பாய்ந்தான். மதி **போன்ற** முகம். மாரி**யன்ன**வண்கை.

**போல, போன்ற, அன்ன** என்னும் **உவம உருபுகள்** இடையில் வந்தன.

5. **அ**ம்மாடு, **இ**வ்வீடு, **எ**ந்நாடு, கந்த**னோ?**

**அ, இ** என்னும் **சுட்டெழுத்துக்களும் எ, ஒ** என்னும் **வினா** வெழுத்துக்களும் தனித்து வராமல் சொற்களின் முன்னும் பின்னும் வந்தன.

6. அவன் **திடு திடென** ஓடினான்—ஒலிக் குறிப்பு.
நான் **திடுக்கெனப்** பயந்தேன்—அச்சக் குறிப்பு.
புலி **சரேலெனப்** பாய்ந்தது—விரைவுக் குறிப்பு.

ஒலி, அச்சம், விரைவு முதலான பொருள்களைக் குறிப்பால் உணர்த்தும் சொற்களும் இடையில் வந்தன.

7. நால்வருள் வேல**னே** விரைவாய் ஓடினான்.

நால்வரிலிருந்து வேலனைப் பிரித்துக் காட்டுவதால் **ஏ** பிரிநிலைப் பொருளில் வந்தது.

இவ் விழிந்த செயலை நா**னோ** செய்வேன்.

நான் செய்யமாட்டேன் என எதிர் மறுத்துக் கூறுவதால் **ஓ** எதிர்மறைப் பொருளில் வந்தது.

இவ்வாறு தத்தம் பொருளை உணர்த்திவரும் **ஏ, ஓ** முதலானவைகளும் தனித்து வராமல் சொற்களினிடையே வந்தன.

8. **ஏ ஏ** இவளொருத்தி பேடி.

**ஏ ஏ** என்பன வேறு பொருளுணர்த்தாமல் முன்னால் இசை நிறைவுக்காக வந்துள்ளன.

ஆடுவோ**மே** பள்ளு பாடுவோ**மே**. கேண்மி**னோ**.

**ஏ, ஓ** என்பன ஈற்றில் அசைநிலையில் வந்துள்ளன.

இவ்வாறு இசைநிறை அசைநிலையில் வருவனவும் தனித்து வராமல் சொற்களின் முன்னும் பின்னும் சார்ந்து வந்தன.

மேற்கண்ட வண்ணம் தனித்து வராமல் மற்ற சொற்களைச் சார்ந்து வருவன யாவும் **இடைச் சொல்** எனப்படும்.

**தனித்து வராமல் பெயர் வினைகளை இடமாகக் கொண்டு அவற்றை அடுத்துவரும் சொல் இடைச்சொல் ஆகும்.**

வேற்றுமை உருபுகளும், விகுதிகளும், இடைநிலைகளும், சாரியைகளும், உவமை உருபுகளும், சுட்டெழுத்துக்களும், வினாவெழுத்துக்களும், குறிப்பால் பொருள்களையுணர்த்தும் சொற்களும், தத்தம் பொருளுணர்த்த வருவனவும், இசை நிறையும், அசைநிலையும் இடைச்சொற்களாம்.

இவை பெயர்ச்சொற்களும் அல்ல ; வினைச்சொற்களும் அல்ல ; அவற்றைச் சார்ந்து அவற்றை இடமாகக் கொண்டு வருதலின் இடைச் சொற்கள் எனப் பெயர் பெற்றன. இடைச் சொற்கள் பெயர்களுக்கு இடையிலும் முன்னும் பின்னும் வரும் தன்மையுடையன.

**குறிப்பு.** வேற்றுமை உருபுகள், விகுதிகள், இடைநிலைகள் முதலியன பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் கூறுங்கால் அவற்றில் அடங்குமாயினும், தனித்தனியே பிரித்துக் கூறுங்கால் அவைகள் இடைச்சொற்களாகும்.

**நன்னூல்: வேற்றுமை வினை சாரியை ஒப்புருபுகள்**
**தத்தம் பொருள இசைநிறை யசைநிலை**
**குறிப்பெ னெண் பகுதியிற் றனித்தியலின்றிப்**
**பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்**
**தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல்.**

## 6. உரிச்சொல்

இடைச்சொற்களைப் போலவே சில சொற்கள் பெயர் வினைகளைச் சார்ந்து நின்று அவற்றிற்குரிய பண்பை உணர்த்தும் தன்மையுடையன. அவை உரிச்சொல் எனப் பெயர் பெறும்.

**சாலப்** பேசினன். **உறு**புகழ். **தவப்**பிஞ்சு. **நனி** தின்றான். **கடி** வேல். **கடி** மலர்.

இவற்றில் **சால, உறு, தவ, நனி** என்னும் சொற்கள் பெயர் வினைகளைச் சார்ந்து அவற்றிற்கு உரிய **மிகுதி** என்னும் பண்பினை உணர்த்தி நின்றன. **கடி** என்னும் சொல் பெயர்களைச் சார்ந்து கூர்மை, மணம் என்னும் பண்பினை உணர்த்தி நின்றது. இவ்வாறு வருவது **உரிச்சொல்** எனப்படும்.

**தனித்து வராமல் பெயர் வினைகளைச் சார்ந்து அவற்றிற்குரிய பண்பை உணர்த்திவரும் சொல் உரிச்சொல் ஆகும்.**

**குறிப்பு:** உரிச்சொல் பெரும்பாலும் செய்யுளில் வரும். சிறுபான்மை உரைநடையில் வரும். ஆதலால் செய்யுட்குரிய சொல் எனவும் கொள்ளலாம்.

## பயிற்சி

(i) அடியில் வரும் தொடர்களில் உள்ள இடைச்சொற்கள், உரிச்சொற்கள் இவற்றை எடுத்து எழுதி விளக்குக :—

பொன்னனது புத்தகத்தைக் கண்ணனுக்குக் கொடுத்தான்.
முருகன் எழுதினன் ; குமரன் படித்தான்.
மண்ணாங்கட்டி மழையில் கரையும்.
மண் சுவர் மடமடவெனச் சரிந்தது.
நாங்கள் திடுக்கெனப் பயந்தோம்.
ஓடுவோமே விளையாடுவோமே.
கந்தனே முருகனே வந்தவன் யாவன்.
பசுவைப்போலிருந்தான் ; புலியைப்போல் பாய்ந்தான்.
காந்தியடிகள் சாலப் பெரியவர்.
உலகுக் குழைத்து உறுபுகழடைந்தார்.
தவப்பிஞ்சென்றால் தனிநனி தின்பேன்.

## வினாக்கள்

1. இடைச்சொல் என்பது யாது ?

2. எவை எவை இடைச்சொற்களாக வரும் ? காட்டுடன் எழுது.

3. உரிச்சொல் என்பது யாது ?

4. மிகுதி என்னும் குணத்தை உணர்த்தும் உரிச்சொற்கள் எவை ? காட்டுடன் எழுது.

5. இடைச்சொல்லுக்கும், உரிச்சொல்லுக்கும் உள்ள வேற்றுமை யாது ?

# III. பொது

## தொகாநிலைத் தொடர், தொகைநிலைத் தொடர்.

பா**லைக்** குடித்தான். **எனது** புத்தகம்.
மதி **போன்ற** முகம்.

இத்தொடர்களில் **ஐ, அது** என்னும் வேற்றுமை உருபுகளும், **போன்ற** என்னும் உவமை உருபும் தொகாமல் (மறையாமல்) வெளிப்பட்டு நிற்கச் சொற்கள் தொடர்ந்துள்ளன. இவ்வாறு தொடர்வது **தொகாநிலைத் தொடர்** எனப்படும்.

பால் குடித்தான். என் புத்தகம். மதி முகம்.

இத்தொடர்களில் **ஐ, அது** என்னும் வேற்றுமை உருபுகளும், **போன்ற** என்னும் உவமை உருபும் வெளிப்படையாகத் தோன்ருமல் மறைந்து நிற்கச் சொற்கள் தொடர்ந்துள்ளன. இவ்வாறு தொடர்வது **தொகை நிலைத் தொடர்** எனப்படும்.

**சொற்கள் ஒன்ருேடொன்று தொடரும்போது இடையில் வேற்றுமை யுருபுகள் முதலானவை வெளிப்பட்டு நிற்கத் தொடர்வது தொகாநிலைத் தொடர் ஆகும்; வெளிப்பட்டு நிற்காமல் மறைந்து நிற்கத் தொடர்வது தொகைநிலைத் தொடர் ஆகும்.**

தொகை நிலை–தொக்கி நிற்றல், மறைந்து நிற்றல்.
தொகாநிலை–மறையாமல் வெளிப்பட்டு நிற்றல்.

# IV. புணர்ச்சி

## 1. நிலைமொழி, வருமொழி.

பாடம் படித்தான். பாடமெழுதினன். இவற்றில் **பாடம்** என்பது முதலில் நிற்கும் சொல். இது, **நிலைமொழி** எனப் படும். **படித்தான், எழுதினன்** என்பவை பின்னர் வரும் சொற்கள். இவை **வருமொழி** எனப்படும். இவை யிரண்டும் ஒன்றுபடக் கூடுவது **புணர்ச்சி** எனப்படும்.

**சொற்கள் ஒன்றோடொன்று கூடும்போது முதலில் நிற்கும் சொல் நிலைமொழி ஆகும்; பின்னர் வந்து சேரும் சொல் வருமொழி ஆகும். நிலைமொழி யீறும் வருமொழி முதலும் ஒன்றுபடக் கூடுவது புணர்ச்சி ஆகும்.**

நிலைமொழியீறு, உயிரீறு, மெய்யீறு என இருவகைப்படும்.

வருமொழிமுதலும் உயிர்முதல் மெய்ம்முதல் என இரு வகைப்படும்.

**காட்டு:** மணி + அடி. உயிர் ஈற்றின்முன் உயிர் முதல்.
பனை + மரம். உயிர் ஈற்றின்முன் மெய்ம்முதல்.
கடல் + ஆழம். மெய்யீற்றின்முன் உயிர்முதல்.
பொன் + குடம். மெய்யீற்றின்முன் மெய்ம்முதல்.

## 2. வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி.

**வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி** எனப் புணர்ச்சி இருவகைப்படும்.

## வேற்றுமைப் புணர்ச்சி

| வேற்றுமைத் தொகை. | வேற்றுமை விரி. | |
|---|---|---|
| நீர் பருகு | நீரைப்பருகு. | (ஐ) |
| கல் எறிந்தான் | கல்**லால்** எறிந்தான். | (**ஆல்**) |
| சோழன் மகன் | சோழனுக்**கு** மகன். | (**கு**) |
| மலைவீழ் அருவி | மலை**யின்**வீழ் அருவி. | (**இன்**) |
| என் வீடு | **எனது** வீடு. | (**அது**) |
| மலைக் குகை | மலைக்**கண்** குகை. | (**கண்**) |

இவற்றில் இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையில் உருபுகள் மறைந்தும், வெளிப்பட்டும் நிற்கச் சொற்கள் புணர்ந்தன. இவ்வாறு புணர்வது **வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும்.**

**நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது இரண்டு முதல் ஏழு வரையில் உள்ள வேற்றுமை யுருபுகள் இடையில் மறைந்தேனும் வெளிப்பட்டேனும் நிற்கப் புணர்வது வேற்றுமைப் புணர்ச்சி ஆகும்.**

**குறிப்பு:** வேற்றுமை உருபுகள் மறைந்து நிற்பது **வேற்றுமைத் தொகைநிலைத் தொடர் — வேற்றுமைத் தொகை** எனப்படும்; வேற்றுமை உருபுகள் வெளிப்பட்டு நிற்பது **வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் — வேற்றுமை விரி** எனப்படும்.

முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் பெயரும், பெயரின் மாடுபாடுகளும் அன்றி வேறு உருபுகள் இன்மையால் அவை வேற்றுமைப் புணர்ச்சியில் சேரவில்லை; அல்வழிப் புணர்ச்சியில் சேர்ந்து வரும். (அல் + வழி + புணர்ச்சி) வேற்றுமையல்லாத வழியில் சொற்கள் புணர்வது.

## அல்வழிப் புணர்ச்சி

| | |
|---|---|
| கருங்கல் (கருமை **ஆகிய** கல்)<br>மலரடி (மலர் **போன்ற** அடி) | வேற்றுமையல்லாத வழியில் **பண்புருபும்,** **உவமையுருபும்** மறைந்து தொகையாக வந்தன. |
| கந்தன் வந்தான்.<br>முருகா! வருக. | முதல் வேற்றுமை—எழுவாய்த் தொடரும், எட்டாம் வேற்றுமை—விளித் தொடரும் அல்வழியில் வந்தன. |
| வந்தான் வேலன்.<br>வந்த பையன்.<br>வந்து போனான். | வினைமுற்றுத் தொடரும், பெயரெச்ச வினையெச்சத் தொடர்களும் அல்வழியில் வந்தன. |

இவ்வாறு வேற்றுமையல்லாத வழியில் சொற்கள் புணர்வது **அல்வழிப் புணர்ச்சி** எனப்படும்.

**நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது வேற்றுமையல்லாத வழியில் புணர்வது அல்வழிப் புணர்ச்சி ஆகும்.**

**குறிப்பு:** அல்வழிப் புணர்ச்சியில் பண்பு முதலான உருபுகள் மறைந்துநிற்கப் புணர்வது **அல்வழித் தொகைநிலைத் தொடர்** எனப்படும்; உருபுகள் மறையாமலும், உருபுகளின்றியும் புணர்வது **அல்வழித்தொகாநிலைத்தொடர்** எனப்படும்.

## 3. இயல்பு புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி

வேற்றுமை, அல்வழி என்னும் இருவகையிலும் வரும் புணர்ச்சி **இயல்பு புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி** என இரண்டு வகைப்படும்.

புலி + பெரியது = புலி பெரியது. என் + கால் = என் கால்.

இவை, நிலைமொழியும் வருமொழியும் யாதொரு மாறு பாடும் அடையாமல் இயல்பாகவே நின்று புணர்ந்தன. இவ்வாறு வருவது **இயல்பு புணர்ச்சி** எனப்படும்.

பாடம் + எழுது = பாடமெழுது.

புகழ் + அடைந்தான் = புகழடைந்தான்.

இவற்றில், நிலைமொழியீற்றில் நின்ற மெய்யுடன் வருமொழி முதலில் வந்த உயிர் சேர்ந்து உயிர்மெய்யெழுத்தாகிப் புணர்ந்தன. இவ்வாறு வருவதும் **இயல்பு புணர்ச்சி** எனப்படும்.

**நிலைமொழியும் வருமொழியும் யாதொரு மாறுபாடும் (விகாரமும்) இன்றி இயல்பாகப் புணர்வது இயல்பு புணர்ச்சி யாகும்.**

**நன்னூல் : விகார மனைத்து மேவல தியல்பே**
**உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே.**

## விகாரப்புணர்ச்சி

வாழை + காய் = வாழைக்காய். **க்** தோன்றியுள்ளது.

புளி + பழம் = புளி**யம்**பழம். **அம்** தோன்றியுள்ளது.

பொன் + குடம் = பொ**ற்**குடம். **ன், ற்** ஆகத் திரிந்தது.

முள் + செடி = மு**ட்**செடி. **ள், ட்** ஆகத் திரிந்தது.

மரம் + வேர் = மரவேர். **ம்** கெட்டது.

இவற்றில் நிலை மொழியும் வருமொழியும் புணரும்போது தோன்றல், திரிதல், கெடுதல் ஆகிய விகாரங்கள் வந்துள்ளன. இவ்வாறு வருவது **விகாரப் புணர்ச்சி** எனப் படும்.

**நிலை மொழியும் வருமொழியும் புணரும்போது விகாரம் அடைந்து வருவது விகாரப் புணர்ச்சி ஆகும்.**

**தோன்றல், திரிதல், கெடுதல்** என **விகாரம்** மூன்று வகைப்படும்.

## 4. உடம்படு மெய்

### உயிர் முன் உயிர் புணர்தல்

| | |
|---|---|
| மணி + அடி = மணி**ய**டி.<br>தீ + எரிந்தது = தீ **யெ**ரிந்தது.<br>பனை + ஓலை = பனை**யோ**லை. | உயிர் முன் உயிர் வர இடையில் **ய்** தோன்றியது. |
| பலா + இலை = பலா**வி**லை.<br>திரு + அருள் = திரு**வ**ருள். | உயிர் முன் உயிர் வர இடையில் **வ்** தோன்றியது. |

இவ்வாறு உயிர்முன் உயிர் வரும்போது இரண்டு உயிர்களையும் உடம்படுத்த இடையில் வந்த மெய் **உடம்படுமெய்** எனப்படும்.

**நிலைமொழி யிறுதியில் உள்ள உயிரின் முன் வருமொழி முதலில் உயிர் எழுத்து வருமாயின் அவ்விரண்டினையும் உடம் படுத்த இடையில் வரும் மெய் உடம்படு மெய் ஆகும்.**

**ய், வ் என்னும் இரண்டும் உடம்படு மெய்யாக வரும்.**

## யகர வகர உடம்படு மெய்கள் வருமிடங்கள்

**காட்டு :**

| | |
|---|---|
| படி + அரிசி = படி**ய**ரிசி.<br>நீ + எடு = நீ**யெ**டு.<br>மலை + ஆடு = மலை**யா**டு. | **இ, ஈ, ஐ** முன் உயிர் வர இடையில் **யகர** உடம்படு மெய் தோன்றியது |
| பல + அடி = பல**வ**டி.<br>மா + இலை = மா**வி**லை.<br>திரு + அடி = திரு**வ**டி.<br>பூ + இதழ் = பூ**வி**தழ்.<br>நொ + இது = நொவ்**வி**து<br>கோ + எங்கே = கோ**வெ**ங்கே ?<br>வௌ + என்றான் = வௌ**வெ**ன்றான். | **அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ** என்னும் உயிர்களுக்கு முன் உயிர் வர இடையில் **வகர** உடம்படு மெய் தோன்றியது. |
| நன்றே + அது = நன்றே**ய**து<br>சே + ஓடியது = சே**வோ**டியது. | **ஏ** முன் உயிர் வர **யகரம் வகரம்** இரண்டும் உடம்படு மெய்யாக வந்தன. |

**இ, ஈ, ஐ என்னும் உயிர்களின் முன் உயிர் வந்தால் இடையில் யகரம் உடம்படு மெய்யாக வரும்; மற்ற உயிர்களின் முன் உயிர் வந்தால் இடையில் வகரம் உடம்படு மெய்யாக வரும்; ஏ என்னும் உயிரின் முன் உயிர் வந்தால் இடையில் யகரமும் வகரமும் உடம்படு மெய்யாக வரும்.**

**குறிப்பு :** உயிர் முன் உயிர் வரின் அவ்விரண்டும் சேர்ந்திசைக்காமல் ஓசைத் தொடர்பின்றி விட்டிசைத்து நிற்கும். ஆதலின், அவற்றை ஓசைத் தொடர்பினால் ஒன்றுபடுத்த (உடம்படுத்த) இடையில் ஒரு மெய் தோன்றும். இவ்வாறு தோன்றாவிடில் புணர்ச்சியின் ஓசை நயம் கெடும்.

உடம்படுத்தல்—உடன்படுத்தல். ஓசைத் தொடர்பில் ஒன்றுபடுத்தல்.

உடம்பு + அடு + மெய் எனப் பிரித்து, வரும் உயிர் ஏறுதற்கு உடம்பாக அடுத்து வரும் மெய் என்றும் பொருள்கொள்ளலாம்.

**நன்னூல் :** **இ ஈ ஐ வழி யவ்வும் ; ஏனை**
**உயிர்வழி வவ்வும் ; ஏமுன் இவ்விருமையும்**
**உயிர் வரின் உடம்படு மெய்என் றாகும்.**

## 5. குற்றுகரப் புணர்ச்சி

நாடு + ஆண்டான் = நாடாண்டான்.
உலகு + அறியும் = உலகறியும்.

வருமொழி முதலில் உயிர் வர நிலைமொழியீற்றில் உள்ள குற்றியலுகரம் தான் ஏறியிருந்த மெய்யை விட்டு நீங்கியது ; அம்மெய்யுடன் வந்த உயிர் சேர்ந்து முடிந்தது.

அஃது + யாது = அஃதியாது.
வீடு + யாது = வீடியாது.

வருமொழி முதலில் யகரம் வர நிலைமொழியீற்றில் உள்ள குற்றியலுகரம் இகரமாகத் திரிந்தது. இவ்வாறு திரிந்து வந்த இகரம் **குற்றியலிகரமாகும்**.

**குற்றியலுகரத்தின் முன் உயிர் வந்தால் அக்குற்றிய லுகரம் தான் ஏறியிருந்த மெய்யை விட்டு நீங்கும்; யகரம் வந்தால் குற்றியலிகரமாகத் திரியும்.**

### பயிற்சி

(i) அடியில் வரும் தொடர்களை விளக்கி அவை எவ்வகைப் புணர்ச்சியில் சேர்ந்தவை என்பதனையும் எழுதுக :—

பால் குடித்தான். சோற்றையுண்டான்.
கந்தனது புத்தகம். என் பலகை.
கத்தியால் அறுத்தான். கல்லெறிந்தான்.

காடு சென்றான். வீட்டிற்கு வந்தான்.
மலையருவி. மேலிருந்து விழுந்தது.
கைவிரல். பெட்டியில் இருந்த மோதிரம்.
செங்கண். மலர்முகம். படித்த பையன்.
வந்து உண்டான்.

(ii) பிரித்து எழுதிப் புணர்ச்சி விதி எழுதுக :—
பாடம் படி. பார்த்தெழுது. கடலலை. நடனமாடு. வாழைப் பழம். புளியங்கொட்டை. கற்சட்டி. மட்பாண்டம். மர நார். படியரிசி. தீயணை. மலையாடு, மாவிலை. கருவூர். சேவடி. நாடறியும். உலகாண்டான். இஃதியாது. மாடியாது.

(iii) சேர்த்தெழுதிப் புணர்ச்சி விதி எழுதுக :—
பலா + காய். பல் + பொடி. புளி + மரம். பொன் + காப்பு. முள் + பாதை. துணி + எடு. தீ + அடுப்பு. வாழை + இலை. விளா + இலை. திரு + அருள். பூ + ஏது. காடு + ஆண் டான். உலகு + உணரும். இஃது + யாது. ஆடு + யாது.

## வினாக்கள்

1. தொகைநிலைத்தொடர், தொகாநிலைத்தொடர்களைக் காட்டுடன் விளக்குக.

2 வேற்றுமைப்புணர்ச்சி, அல்வழிப்புணர்ச்சியைக் காட்டுடன் விளக்கு

3. இயல்பு புணர்ச்சி, விகாரப்புணர்ச்சியைக் காட்டுடன் விளக்கு.

4. உடம்படுமெய் என்பது யாது? உடம்படுமெய் வராவிடில் என்ன குறையேற்படும் ?

5. எவ்வெவ்வெழுத்துக்களின்முன் எவ்வெவ்வெழுத்துக்கள் உடம்படுமெய்களாக வரும் ?

6. குற்றுகரத்தின்முன் உயிர்வந்தால் எவ்வாறு புணரும்? குற்றுகரத்தின்முன் யகரம் வந்தால் எவ்வாறாகும் ?

# V. யாப்பு

## செய்யுளின் பொது இலக்கணம்

அடியில் வந்துள்ள செய்யுட்களை இசையுடன் படித்து, அவற்றின் பொருளையும், கருத்தையும் அறிக. அவற்றில் அமைந்துள்ள அணியையும் உணர்க.

1. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

2. *நற்ற மரைக்கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம்.*

முதற் செய்யுளில் "மணல் நிலத்தில் தோண்டப்பட்ட அளவிற்கேற்ப நீர் ஊறும்; அதுபோல, மக்களுக்கு அறிவு நூல்களைக் கற்ற அளவிற்கேற்ப அறிவு வளரும்" என்ற பொருள் அழகாக அமைந்துள்ளது.

"அறிவு வளர்வதற்கு அறிவு நூல்களை மிகுதியாக மேன் மேலும் கற்கவேண்டும்" என்பது இச்செய்யுளின் கருத்தாகும்.

இதைப்போலவே இரண்டாவது செய்யுட்கு நீங்களே பொருளும் கருத்தும் அறிந்து, காட்டப்பட்டுள்ள உவமானத்தையும் உணர்ந்துகொள்க.

முதற் செய்யுள் இரண்டடிகளால் அமைந்துள்ளது. இரண்டாவது செய்யுள் நான்கடிகளால் அமைந்துள்ளது. ஒவ்வோரடியிலும் பல சொற்கள் சீர்களாக அமைந்துள்ளன. ஒவ்வொரு சீரிலும் பல எழுத்துக்கள் சேர்ந்த அசைகள் அமைந்துள்ளன. எழுத்தும், அசையும், சீரும் சேர்ந்து, அடிகளாய் அமைந்து, பொருளைத் தந்து நிற்கின்றது. இவ்வாறு அழகுபெறச் செய்யப்படுவது **செய்யுள்** எனப்படும்.

**பலவகைச் சொற்களால் பொருளுக்கு இடமாக அணி பெறச் செய்யப்படுவது செய்யுள் ஆகும்.**

செய்யுளுக்கு **யாப்பு, பா, பாட்டு, தூக்கு, தொடர்பு** என்ற பெயர்களும் உண்டு. இதனால், செய்யுள் இலக்கணத்தை **யாப்பிலக்கணம்** என்றும் கூறலாம்.

பல உறுப்புக்களைக் கொண்டு செய்யப்பட்டது செய்யுள். யாக்கப்பட்டது யாப்பு. யாத்தல்–கட்டுதல்.

**எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை** என்னும் ஆறும் செய்யுளின் உறுப்புக்கள் ஆகும்.

# VI. அணி

## அணியின் பொது இலக்கணம்

மேலே "தொட்டனைத் தூறும் மணற்கேணி" என்ற செய்யுளில் 'நூல்களை மிகுதியாகக் கற்ற அளவே அறிவு மிகுதியாக வளரும்' என்பதை விளக்க 'மணற்கேணி தோண்டிய அளவே மிகுதியாக நீர் ஊறும்' என்ற உவமை (உவமானம்) காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு கூறப்படும் பொருள் நன்கு விளங்கப் பொருத்தமாகவும், அழகாகவும் அமைத்துக் கூறுவது **அணி** எனப்படும்.

**செய்யுட்கு அழகு செய்து நிற்பது அணி ஆகும்.**

அது **சொல்லணி, பொருளணி** என இருவகைப்படும்.

**சொல்லணி :** சொல் பற்றி வரும் அணி **சொல்அணி** யாகும். அஃது **மடக்கு, திரிபு** முதலாகப் பலவகைப்படும்.

**பொருளணி :** பொருள்பற்றி வரும் அணி **பொரு ளணி** யாகும். அஃது **தன்மை, உவமை, உருவகம்** முதலாகப் பலவகைப்படும்.

### உவமையணி

**பால் போலும் இன்சொல்.**

இதில் 'சொல் இனிமையானது' என்பதைக் கூற வந்த ஆசிரியர், அதற்கு ஒப்பாக இனிமையுடைய பாலை எடுத்துக் கூறிப் பாலைப்போல இனிமையுடையது சொல் என அழகாக விளக்குகிறார்.

இவ்வாறு ஒரு பொருளின் தன்மையைப் பற்றிக் கூறும் போது, அதற்கு ஒப்பாக (உவமையாக) வேறொன்றை எடுத்துக்கூறி அழகாக விளங்கவைப்பது **உவமையணி** எனப்படும்.

இதில் கூற எடுத்துக்கொண்டது **சொல்**. இது, **உவமேயம்** அல்லது **பொருள்** எனப்படும்.

இதற்கு ஒப்பாகக் கூறப்பட்டது **பால்**. இது, **உவமானம்** அல்லது **உவமை** எனப்படும்.

உவமேயம், உவமானம் இரண்டிற்கும் பொதுவாக அமைந்துள்ள தன்மை **இனிமை**. இது, **பொதுத் தன்மை** எனப்படும்.

உவமையை விளக்க இடையில் வந்த சொல் **போலும்** என்பது. இது, **உவமை உருபு** எனப்படும்.

இவை நான்கும் உவமை அணியின் உறுப்புக்கள் எனப்படும்.

**ஒரு பொருளோடு மற்றொரு பொருளை ஒப்புவமை தோன்றக் கூறுவது உவமை அணியாகும்.**

**உவமானம், உவமேயம், பொதுத்தன்மை, உவமையுருபு** என்னும் நான்கும் உவமையணியின் உறுப்புக்களாகும்.

உவமையணி **பண்பு, தொழில், பயன்** என்னும் இவற்றில் ஒன்றைப் பெற்று வரும்.

**காட்டு:** பவளம் போல் சிவந்த வாய். பண்புவமை. புலி போலப் பாய்ந்தான். தொழில் உவமை. கார்நிகர் வண்கை. பயன் உவமை.

உவமை உறுப்புக்கள் நான்கினையும் பெற்று வருவது **விரியுவமை** எனப்படும். பொதுத்தன்மை உவமையுருபு இவை தொக்கு (மறைந்து) நிற்பின் **தொகையுவமை** எனப்படும்.

**காட்டு:** பவளம்போன்ற வாய்—பொதுத்தன்மை தொக்கது.
அமுத வின்சொல்—உவமையுருபு தொக்கது.
பவளவாய். } பொதுத்தன்மையும்,
அமுத மொழி. } உவமையுருபும் தொக்கன.

உவமையை விளக்க வரும் உருபுகள் பலவாகும்.

### உவம உருபுகள்

நன்னூல் : **போலப் புரைய ஒப்ப உறழ**
**மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப**
**நேர நிகர அன்ன இன்ன**
**என்பவும் பிறவும் உவமத் துருபே.**

### உருவக வணி

**முகமதியைக் கைம்மலரால்** மறைத்தாள். 'முகமாகிய மதியைக் கையாகிய மலரால் மறைத்தாள்' என்பது இதன் பொருள். இது உவமையில் வரும்போது, 'மதிபோன்ற முகத்தை மலர்போன்ற கையால் மறைத்தாள்' என வரும். மதி மலர் உவமானங்கள் ; முகம், கை உவமேயங்கள்.

இங்கு மதிபோன்ற முகம் என்னுது, முகமே மதியாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு உவமானத்தையும் உவமேயத்தையும் வேறுபடுத்திக் கூறுது, உவமானத்தின் தன்மையை உவமேயத்தினிடம் ஏற்றிக் கூறுவது **உருவக வணி** எனப்படும்.

**உவமானத்தையும் உவமேயத்தையும் வேறுபடுத்தாது உவமானத்தின் தன்மையை உவமேயத்திடம் வைத்து ஒன்று படுத்திக் கூறுவது உருவக வணி யாகும்.**

உருவகத்தில் உவமேயத்திற்கும் உவமானத்திற்கும் இடையில் **ஆகிய** முதலான பண்புருபுகள் மறைந்தேனும், விரிந்தேனும் நிற்கும். உருபு மறைந்து வருவது **தொகை யுருவகம்** எனப்படும். உருபு விரிந்து வருவது **விரியுருவகம்** எனப்படும்.

**காட்டு :** கைம்மலர். முகமதி–தொகையுருவகம்.
கையாகிய மலர். } **ஆகிய** என்னும் உருபு வெளிப்பட்டு
முகமாகிய மதி. } நிற்றலால் விரியுருவகம்.

**குறிப்பு :** உவமையை உருவகமாகவும், உருவகத்தை உவமை யாகவும் மாற்றிக் கூறலாம்.

**காட்டு :** அமுதமொழி. (அமுதம்போன்ற மொழி) உவமை.
மொழியமுதம். (மொழியாகிய அமுதம்) உருவகம்.
மதிமுகம். (மதிபோன்ற முகம்) உவமை.
முகமதி. (முகமாகிய மதி) உருவகம்.

### உவமையணிக்கும் உருவகவணிக்கும் உள்ள வேறுபாடுகள்

| உவமையணி | உருவகவணி |
|---|---|
| 1. உவமானம் முன் நிற்கும். | 1. உவமேயம் முன் நிற்கும். |
| 2. உவமான உவமேயங்கள் வேறுபட்டு வரும். | 2. உவமேய உவமானங்கள் ஒன்றுபட்டு வரும். |
| 3. போல முதலியன உரு பாக வரும். | 3. ஆகிய முதலியன உரு பாக வரும். |

## பயிற்சி

(i) அடியில் வரும் தொடர்களில் அமைந்துள்ள உவமை, உருவகவணிகளையும், அவற்றின் தொகை விரிவகையினையும் எடுத்தெழுதி விளக்குக :—

மதிமுகத்தில் மலர்விழிகள் குமுதவாய். அமுத மொழி.
துடிபோலும் இடை; பிடிமானும் நடை.
பசுவை நிகர்த்த தோற்றம்; புலியைக் கடுத்த சீற்றம்.
வாய்மலரின் மொழியமுதம் வழங்கினளே.
விழிமலர்கள் முகமதியில் விளங்குவதும் பெருவியப்பே.
" தாமரை புரையும் காமர் சேவடிப்
பவளத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கும் உடுக்கை "

(ii) உவமையை உருவகமாகவும், உருவகத்தை உவமையாகவும் மாற்றி அமைத்தெழுதுக :—

மலரடி வணங்கி நின்றான்.
மொழித்தேன் மொழிந்து மகிழ்வித்தான்.
வேல்விழியைக் கைம்மலரால் விரைவினிலே மறைத்தனளே!
பவளவாய். சொல்லமுதம். விழித்தாமரை.
வாய்மலர்க்குக் கைத்தளிர்ஊண் வழங்கியது.

## வினாக்கள்

1. செய்யுள் என்பது யாது? செய்யுளின் உறுப்புக்களெவை?
2. அணியென்பது யாது? உவமை அணியின் இலக்கணம் யாது?
3. உவமை அணியின் உறுப்புக்களெவை?
4. விரியுவமை, தொகையுவமை இவற்றைக் காட்டுடன் விளக்கி எழுதுக.
5. விரியுருவகம், தொகையுருவகம் இவற்றைக் காட்டுடன் விளக்கி எழுதுக.
6. உவமையணிக்கும் உருவகவணிக்குமுள்ள வேறுபாட்டினை விளக்குக
7. உவமையை உருவகமாக மாற்றியமைப்பதெப்படி?

# மொழிப் பயிற்சி

## 1. வாக்கியம்

### வாக்கியத்தின் பொது இலக்கணம்

**வேலன் பள்ளிக்குச் சென்று கல்வி பயின்றான்.**

இத்தொடர், சொற்கள் தொடர்ந்து பொருள் முற்றுப் பெற்று நிற்கிறது. இவ்வாறு நிற்பது **முற்றுச்சொற்றொடர்** அல்லது **வாக்கியம்** எனப்படும்.

'வேலன் பள்ளிக்குச் சென்று' என்றாலும்,

'வேலன் பள்ளிக்குச் சென்று கல்வி' என்றாலும் பொருள் முற்றுப்பெறாத நிலையில் எச்சமாக உள்ளது. இவ் வாறு நிற்பது **எச்சச் சொற்றொடர்** எனப்படும்.

**சொற்கள் ஒழுங்குபடத் தொடர்ந்து பொருள் முற்றுப் பெற்று வருவது முற்றுச் சொற்றொடர்—வாக்கியம் ஆகும்.**

**குறிப்பு :** சொற்றொடர்—சொற்கள் தொடர்ந்து வருவது.

முற்றுச் சொற்றொடர்—சொற்கள் தொடர்ந்து பொருள் முற்றுப்பெற்று நிற்பது.

எச்சச் சொற்றொடர் — சொற்கள் தொடர்ந்தும் பொருள் முற்றுப்பெறாமல் எச்சமாக நிற்பது.

வாக்கியம் (வாக்கு+இயம்) சொற்கள் தொடர்ந்து இயங்குவது.

### வாக்கியத்தின் உறுப்புக்கள்

**எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்** என்னும் மூன்றும் வாக்கியத்தின் உறுப்புக்களாகும். சில வாக்கி

யங்கள் செயப்படுபொருள் இல்லாமலும் வரும். எழுவாயும், பயனிலையும் வாக்கியத்தின் முதன்மையான உறுப்புக்களாம். சில வாக்கியங்களில் எழுவாய் மறைந்து வருதலும் உண்டு. அவ்வாறு வரும் எழுவாய்க்குத் **தோன்றா எழுவாய்** என்று பெயர். சில வாக்கியங்களில் செயப்படுபொருள் மறைந்து வரும். ஆனால் பயனிலையைக்கொண்டு அதைக் கண்டு கொள்ளலாம்.

**காட்டு :** கந்தன் பாடம் படித்தான்.

இதில் கந்தன் — எழுவாய்; படித்தான் — பயனிலை; பாடம்—செயப்படுபொருள். இது மூன்று உறுப்புக்களும் அமைந்து வந்த வாக்கியம்.

கந்தன் வந்தான். இது செயப்படுபொருள் இல்லாத வாக்கியம்.

பாடம் படித்தேன். இதில் **நான்** என்னும் எழுவாய் மறைந்துள்ளது. ஆதலால், இவ்வாக்கியத்திற்கு **நான்** என்பது **தோன்றா எழுவாய்** ஆகும்.

நான் உண்டேன்—இதில் செயப்படுபொருள் மறைந் துள்ளது. உண்டேன் என்னும் பயனிலையைக் கொண்டு **உணவு** என்பது செயப்படுபொருள் என ஒருவாறு கண்டு கொள்ளலாம்.

## வாக்கியத்தின் வகை

**தனி வாக்கியம், தொடர் வாக்கியம், கலவை வாக்கியம்** என வாக்கியம் மூவகைப்படும்.

(i) **தனி வாக்கியம்** (Simple Sentence).

**முருகன்** திருக்குறளைப் **படித்தான்.**
**மாணவர்கள்** நன்றாய் **விளையாடினார்கள்.**
**ஆசிரியர்** அறிவுரை **கூறினார்.**

இவ் வாக்கியங்களில் உள்ள ஒவ்வொரு எழுவாயும் ஒவ்வொரு பயனிலையைக்கொண்டு தனித்தனியே முடிந்து நின்றது. இவ்வாறு வருவது **தனி வாக்கியம்** எனப்படும்.

**ஒரு எழுவாயும் ஒரு பயனிலையும் உள்ள வாக்கியம்—ஒரு எழுவாய் ஒரு பயனிலையைக் கொண்டு தனியே முடியும் வாக்கியம் தனி வாக்கியம் ஆகும்.**

(ii) **தொடர் வாக்கியம்** (Compound Sentence).

1. **பொன்னன்** பள்ளிக்குச் **சென்றான்;** கல்வி **பயின்றான்;** இல்லம் **திரும்பினான்.**

இதில் பொன்னன் என்னும் ஒரு எழுவாய் சென்றான், பயின்றான், திரும்பினான் என்னும் பயனிலைகளைக்கொண்டு முடிந்தது.

2. **கந்தன்** காலையில் **எழுந்து, நீராடி,** உணவு **உண்டான்.**

இதைக் கந்தன் காலையில் எழுந்தான். அவன் நீராடினான். அவன் உணவு உண்டான் என மூன்று தனி வாக்கியங்களாகப் பிரிக்கலாம். இதில் மூன்று தனி வாக்கியங்கள் தொடர்ந்து வந்து உண்டான் என்னும் ஒரே பயனிலையைக்கொண்டு முடிந்தது.

3. **கந்தனும், பொன்னனும், கண்ணனும்** பந்தாடச் **சென்றார்கள்.**

இதில் கந்தன், பொன்னன், கண்ணன் என்னும் மூன்று எழுவாய்கள் ஒரே பயனிலையைப் பெற்று முடிந்தன.

இவ்வாறு முடிவது **தொடர் வாக்கியம்** எனப்படும்.

**ஒரு எழுவாய் பல பயனிலைகளைக்கொண்டு முடிவதும், பல தனி வாக்கியங்கள் தொடர்ந்து வந்து ஒரு பயனிலையைக் கொண்டு முடிவதும், பல எழுவாய்கள் ஒரே பயனிலையைக் கொண்டு முடிவதும் தொடர் வாக்கியம் ஆகும்.**

## (iii) கலவை வாக்கியம் (Complex Sentence)

ஆசிரியர் "திருக்குறள் படித்தால் அறிவு வளரும்" என்று உரைத்தார்.

இதில் 'ஆசிரியர் உரைத்தார்' என்பது முதன்மையான வாக்கியம்.

'திருக்குறள் படித்தால் அறிவு வளரும்' என்பது அதைச் சார்ந்துவந்த சார்பு வாக்கியம். 'என்று' என்பது இரு வாக்கியங்களையும் சேர்க்கிறது. இவ்வாறு கலந்து வருவது **கலவை வாக்கியம்** எனப்படும்.

**முதல் வாக்கியமும் சார்பு வாக்கியமும் கலந்து வருவது கலவை வாக்கியம் ஆகும்.**

## 2. வாக்கியப் பொருத்தம்

ஒரு வாக்கியத்தில் அமைந்துள்ள எழுவாயும், அதற்குரிய பயனிலையும் திணை, பால், எண், இடம் இவைகளில் பொருத்தமாக நின்று முடிவது **வாக்கியப் பொருத்தம்** எனப்படும்.

### (i) திணைப்பொருத்தம்

மக்கள் உண்டனர். எழுவாயும் பயனிலையும் உயர்திணை.
மாடுகள் மேய்ந்தன. எழுவாயும் பயனிலையும் அஃறிணை.

இவ்வாறு முடிவது **திணைப் பொருத்தம்** எனப்படும்.

**உயர்திணை, அஃறிணைக்குரிய எழுவாய்கள் அவ்வத் திணைக்குரிய பயனிலைகளைப் பெற்று முடிவது திணைப் பொருத்தம் ஆகும்.**

### (ii) பால் பொருத்தம்

கண்ணன் பாடினன். ஆண்பால் எழுவாய், பயனிலை.
பொன்னி ஆடினள். பெண்பால் எழுவாய், பயனிலை.
மாணவர் மகிழ்ந்தனர். பலர்பால் எழுவாய், பயனிலை.
மாடு மேய்ந்தது. ஒன்றன்பால் எழுவாய், பயனிலை.
மரங்கள் வளர்ந்தன. பலவின்பால் எழுவாய், பயனிலை.

இவ்வாறு பெற்று முடிவது **பால் பொருத்தம்** எனப்படும்.

**ஐந்து பால்களிலும் வரும் எழுவாய்கள் அவ்வப் பால்களுக்குரிய பயனிலைகளைப் பெற்று முடிவது பால் பொருத்தம் ஆகும்.**

### (iii) எண்பொருத்தம்

| | |
|---|---|
| அவன் வந்தான்.<br>அது வந்தது. | ஒருமை எழுவாய், ஒருமைப் பயனிலை. |
| அவர்கள் வந்தார்கள்.<br>அவை சென்றன. | பன்மை எழுவாய், பன்மைப் பயனிலை. |

இவ்வாறு பெற்று முடிவது **எண் பொருத்தம்** எனப்படும்.

**ஒருமை, பன்மையில் வரும் எழுவாய்கள் ஒருமை பன்மைப் பயனிலைகளைப் பெற்று முடிவது எண் பொருத்தம் ஆகும்.**

### (iv) இடப்பொருத்தம்

நான் செய்தேன். தன்மை எழுவாய், பயனிலை.

நீ செய்தாய். முன்னிலை எழுவாய், பயனிலை.

அவன் செய்தான். படர்க்கை எழுவாய், பயனிலை.

இவ்வாறு பெற்று முடிவது **இடப் பொருத்தம்** எனப் படும்.

**தன்மை முதலான இடங்களில் வரும் எழுவாய்கள் அவ்வவ்விடங்களுக்குரிய பயனிலைகளைப் பெற்று முடிவது இடப் பொருத்தம் ஆகும்.**

### (v) மரியாதைப் பொருத்தம்

என் தாயார் உணவளித்தார்.

பாட்டனார் வந்தார். அண்ணார் சென்றார்.

இவற்றுள் தாய், பாட்டன், அண்ணன் என்னும் சொற்கள் ஒருமைப் பெயர்களாயினும் பெரியோர்களை ஒருமைச் சொல்லால் கூறுவது மரியாதையாகாது எனக் கருதி, 'ஆர்' என்னும் பன்மை விகுதி சேர்த்துக் கூறப்பட்டுள்ளன. அதற்கேற்ப அச்சொற்கள் பன்மைப் பயனிலைகளைப் பெற்று முடிந்துள்ளன. இவ்வாறு வருவது **மரியாதைப் பொருத்தம்** எனப்படும்.

**மரியாதைக்காக ஒருமைப் பெயருடன் பன்மை விகுதி சேர்த்துப் பன்மைப் பயனிலையைக்கொண்டு முடிப்பது மரியாதைப் பொருத்தம் ஆகும்.**

## 3. எழுத்துப் பிழைகளும், திருத்தமும்.

தமிழ்ச் சொற்களில் ஒரு எழுத்து இருக்கவேண்டிய விடத்தில் ஒலி வேற்றுமை உணராமல் வேறு எழுத்தை வைத்தெழுதுவது எழுத்துப் பிழையாகும். அவ்வாறு எழுதுவதால் சொல்லின் பொருளே வேறுபட்டுக் கருத்தும் மாறுபட்டு விடும்.

ஆதலின், எந்த இடத்தில் (எப்பொருளுக்கு) எந்த எழுத்தைப் பயன்படுத்தவேண்டும் என்பதை உணர்ந்து திருத்தமாக எழுதவேண்டும்.

**ல**கரம், **ள**கரம் இவ்விரண்டும் தம்முள் ஒலி வேற்றுமையும், பொருள் வேற்றுமையும் உடையவை.

அடியில் வரும் சொற்களை நன்கு ஒலித்துப் பொருள் அறிக.

கல்—கள். வால்—வாள். பல்—பள்.
கொல்—கொள். விலா—விளா. வலை—வளை.
கொல்லை—கொள்ளை. வெல்லம்—வெள்ளம்.

| **பிழை** | **திருத்தம்** |
|---|---|
| கள் உடைந்தது. | கல் உடைந்தது. |
| கல் குடிக்காதே. | கள் குடிக்காதே. |
| வாலால் வெட்டினன். | வாளால் வெட்டினன். |
| பள் துளக்கினன். | பல் துலக்கினன். |
| குதிரை கொல் தின்றது. | குதிரை கொள் தின்றது. |
| விலா மரம் வலர்ந்தது. | விளா மரம் வளர்ந்தது. |
| விளாவெளும்பு முறிந்தது. | விலாவெலும்பு முறிந்தது. |
| வளை வீசினன். | வலை வீசினன். |
| வெள்ள உருண்டை. | வெல்ல உருண்டை. |

இவ்வாறு பொருளறிந்து பிழையின்றித் திருத்தமாக எழுதவேண்டும்.

**ள**கரம், **ழ**கரம் இவ்விரண்டும் தம்முள் ஒலி வேற்றுமையும், பொருள் வேற்றுமையும் உடையவை.

சிலர் ழகர ஒலியை ளகரமாகவும், யகரமாகவும், வேறு விதமாகவும் தவறாக ஒலிப்பர். மாற்றியும் எழுதுவர். அவ்வாறு செய்வது பிழை ஆகும்.

அடியில் வரும் சொற்களை நன்கு ஒலித்துப் பொருள் அறிக.

| | |
|---|---|
| வாள் — வாழ். | வாளை — வாழை. |
| விளி — விழி. | உளு — உழு. |

| **பிழை** | **திருத்தம்** |
|---|---|
| உயிர் வாள்ந்தான். | உயிர் வாழ்ந்தான். |
| வாளைப் பளம். | வாழைப் பழம். |
| கடிதம் எளுதினான். | கடிதம் எழுதினான். |
| தமிள் மொளி. | தமிழ் மொழி. |
| கண் விளித்தான். | கண் விழித்தான். |
| நிலம் உளுதான். | நிலம் உழுதான். |
| வளக்கம்—வயக்கம். | வழக்கம். |
| இசித்துக்கொண்டு போ.<br>இளுத்துக்கொண்டு போ. | இழுத்துக்கொண்டு போ. |
| திருவிளாக் கூட்டம். | திருவிழாக் கூட்டம். |

இவ்வாறு பொருளறிந்து பிழையின்றித் திருத்தமாக எழுதவேண்டும்.

ரகரம், றகரம் இவ்விரண்டும் தம்முள் ஒலி வேற்றுமையும் பொருள் வேற்றுமையும் உடையவை.

அடியில் வரும் சொற்களை நன்கு ஒலித்துப் பொருள் அறிக.

அறம் — அரம். மறம் — மரம் விறகு — விரகு.
பறவை — பரவை. கறத்தல் — கரத்தல்.
கறி — கரி. பறி — பரி. அறிதல் — அரிதல்.

| பிழை | திருத்தம் |
|---|---|
| அர நெரி நின்ருன். | அற நெறி நின்ருன். |
| மறம் ஏரி மலர் பரித்தான். | மரம் ஏறி மலர் பறித்தான். |
| காய்கரி சமைத்தாள். | காய்கறி சமைத்தாள். |
| விரகு வெட்டினன். | விறகு வெட்டினன். |
| பரவைகள் பரந்தன. | பறவைகள் பறந்தன. |
| பால் கரந்தான். | பால் கறந்தான். |
| இயல்வது கறவேல். | இயல்வது கரவேல். |
| கறுத்து அரிந்தான். | கருத்து அறிந்தான். |
| பழம் அறிந்தான். | பழம் அரிந்தான். |
| நாகம் கறந்துரையும். | நாகம் கரந்துறையும். |
| காறணம். | காரணம். |
| பெறியது, சிரியது. | பெரியது, சிறியது. |

இவ்வாறு பொருளறிந்து பிழையின்றித் திருத்தமாக எழுதவேண்டும்.

## வேறு வகையில் ஏற்படும் பிழைகளும், திருத்தமும்.

மேற்கண்டவாறு எழுத்து மாற்றத்தால் ஏற்படும் பிழைகளன்றியும், சொற்சிதைவுகளாலும், சொல் திரிபுகளாலும் பிழைகள் ஏற்படும். அவற்றையும் அறிந்து திருத்தமாக எழுதவேண்டும்.

| பிழை | திருத்தம் |
|---|---|
| அருவா மணை. | அரிவாள் மணை. |
| அண்ணாக் கயிறு. | அரைஞாண் கயிறு. |
| அமக்களம்-அமுக்களம். | அமர்க்களம். |
| ஆத்துக்குப் போனான். | அகத்துக்குப் போனான். |

| பிழை | திருத்தம் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| உத்திரவு | உத்தரவு | ரம்பம்பம் | அரம்பம் |
| உமிநீர் | உமிழ்நீர் | ரங்கன் | அரங்கன் |
| எச்சகலை | எச்சிற்கலை | ரொம்ப | நிரம்ப |
| எண்ணை | எண்ணெய் | விரை | விதை |
| குடக்கூலி | குடிக்கூலி | வைக்கல் | வைக்கோல் |
| குறுணை | குறு நொய் | வெக்கம் | வெட்கம் |
| கேழ்வி | கேள்வி | வேஷ்டி | வேட்டி |
| கோர்வை | கோவை | ஆக்ஷி | ஆட்சி |
| சுவற்றில் | சுவரில் | காக்ஷி | காட்சி |
| தவக்களை | தவளை | மாக்ஷி | மாட்சி |
| துடை | தொடை | சூக்ஷி | சூழ்ச்சி |
| துகை | தொகை | முழுங்கு | விழுங்கு |
| நொங்கு | நுங்கு | புழுக்கை | பிழுக்கை |
| நோம்பு | நோன்பு | பொம்பிளை | பெண்பிள்ளை |

## 4. வாக்கிய முடிவுப் பிழைகளும், திருத்தமும்.

ஒரு வாக்கியத்தில் வந்துள்ள எழுவாய் முதலானவைகளுக்கு ஏற்றவாறு முடிவும் அமைந்திருக்கவேண்டும். அவ்வாறு அமையாவிடில் அது முடிவுப் பிழையாகும்.

| பிழை | திருத்தம் |
| --- | --- |
| நாயும் பூனையும் வந்தது. | நாயும் பூனையும் வந்தன. |
| பொன்னன் அல்லது வேலன் வருவார். | பொன்னன் அல்லது வேலன் வருவான். |
| நானும் அவனும் விளையாடினேன். | நானும் அவனும் விளையாடினோம். |
| நீங்களும் அவர்களும் வந்தார்கள். | நீங்களும் அவர்களும் வந்தீர்கள். |
| ஆட்டு மந்தை செல்கின்றன. | ஆட்டு மந்தை செல்கின்றது. |
| மாடு தண்ணீர் உண்டது. | மாடு தண்ணீர் குடித்தது. |
| பாம்பு தேரையைத் தின்றது. | பாம்பு தேரையை விழுங்கியது. |
| குதிரை புல்லை விழுங்கியது. | குதிரை புல்லைத் தின்றது. |
| தச்சனால் மரம் வெட்டியது. | தச்சனால் மரம் வெட்டப்பட்டது. |

மேற்கண்டவாறு எழுவாய்களுக்கேற்ற பயனிலைகளையும், செயப்படு பொருளுக்கேற்ற பயனிலைகளையும் அமைத்து வாக்கியங்களை முடிக்கவேண்டும்.

## 5. வாக்கிய மாற்றம்

ஒருவகை வாக்கியத்தை மற்றொருவகை வாக்கியமாக மாற்றி அமைப்பது **வாக்கிய மாற்றம்** எனப்படும்.

1. **தச்சன் நாற்காலி செய்தான்.** இது தச்சன் நாற்காலியைச் செய்தான் என்பதை உணர்த்துவதால் **செய்வினை வாக்கியம் ஆகும்.**

**நாற்காலி தச்சனால் செய்யப்பட்டது.** இது நாற்காலி தச்சனால் செய்யப்பட்டது என்பதை உணர்த்துவதால் **செயப்பாட்டு வினை வாக்கியம் ஆகும்.**

இவ்வாறு செய்வினை வாக்கியத்தைச் செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றலாம்.

2. **கந்தன் வந்தான்.** இது உடன்பாட்டு வாக்கியம்.

**கந்தன் வந்திலன்.** இது எதிர்மறை வாக்கியம்.

இவ்வாறு உடன்பாட்டு வாக்கியத்தை எதிர்மறை வாக்கியமாக மாற்றலாம்.

3. **நான் பள்ளி சென்று, கல்வி பயின்றேன்.** இது தொடர் வாக்கியம்.

**நான் பள்ளி சென்றேன். கல்வி பயின்றேன்.** இவை தனி வாக்கியங்கள்.

இவ்வாறு தொடர் வாக்கியத்தைத் தனி வாக்கியங்களாக மாற்றலாம்.

4. **அவன் போனான்.** இது செய்தி வாக்கியம்.

**அவன் போனானா?** இது வினா வாக்கியம்.

இவ்வாறு செய்தி வாக்கியத்தை வினா வாக்கியமாக மாற்றலாம்.

## 6. நிறுத்தக் குறிகள்

நாம் படிக்கும்பொழுது நிறுத்தவேண்டிய விடங்களில் நிறுத்தியும், உணர்ச்சியுடன் படிக்கவேண்டிய விடங்களில் உணர்ச்சியுடனும் படிக்கவேண்டும். இம்முறையை அறிவிக்க இடப்படும் குறிகள் **நிறுத்தக்குறிகள்** எனப்படும்.

காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி; முற்றுப் புள்ளி, வினைக்குறி, வியப்புக்குறி, மேற்கோள்குறி என நிறுத்தக் குறிகள் பல வகைப்படும்.

**முற்றுப்புள்ளி:** ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் நிறுத்தவேண்டுமென்பதை அறிவிக்க முற்றுப்புள்ளி இடவேண்டும். (முற்றுப்புள்ளி—வாக்கியம் முடிந்ததைக் காட்டும் புள்ளி.)

முற்றுப்புள்ளி உள்ள இடங்களில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

**காட்டு:** திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார். உலகம் திருக்குறளைப் போற்றுகின்றது. நாம் திருக்குறளை நன்கு படிக்கவேண்டும்.

**, காற்புள்ளி:** ஒரு வாக்கியத்தின் இடையில் வரும் வினையெச்சங்களுக்குப் பின் சற்று நிறுத்தவேண்டியதற்காகக் காற்புள்ளி இடவேண்டும்.

காற்புள்ளி உள்ள இடங்களில் ஒரு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

**காட்டு:** வேலன் கல்வி கற்று, நல்லறிவு பெற்றான்.

**; அரைப்புள்ளி :** ஒரு தொடர் வாக்கியத்தில் இடையில் முடியும் பயனிலைகளுக்குப் பின் நிறுத்தும்பொருட்டு அரைப்புள்ளி இடவேண்டும். அரைப்புள்ளி உள்ள இடங்களில் இரண்டு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

**காட்டு :** முருகன் ஆற்றுக்குச் சென்றான் ; நீராடினான் ; வீட்டிற்கு வந்தான். உழவன் வயலை உழுதான் ; நெல்லை விதைத்தான் ; நீர்ப்பாய்ச்சினான்.

**: முக்காற்புள்ளி :** ஒரு வாக்கியத்தில் ஒருவர் கூறினார் என்று விளக்கப்புகும்போது முக்காற்புள்ளி இடவேண்டும். ஆசிரியர் பெயரைக் கூறி அவருடைய மேற்கோளை எடுத்தாளும்போதும் இடையில் இப்புள்ளி இடவேண்டும்.

இப்புள்ளியுள்ள இடங்களில் மூன்று மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

**காட்டு :** காந்தியடிகள் கூறினார் : "கடமையைச் செய் ; பயனை எதிர்பாராதே."

ஔவையார் கூறினார் : "நன்மை கடைப்பிடி."

**? வினாக்குறி :** வினா வாக்கியங்களின் இறுதியில் வினாக்குறி இடவேண்டும். இக்குறியுள்ள இடங்களில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

**காட்டு :** நீ பள்ளிக்குச் சென்றாயா ? என்னென்ன பாடங்கள் நடந்தன ?

**! வியப்புக்குறி—உணர்ச்சிக்குறி:** வியப்பு முதலான உணர்ச்சிகளைக் குறிக்கும் சொற்களுக்குப் பின்னும் விளிவேற்றுமையிலும் உணர்ச்சிக்குறி இடவேண்டும். இக் குறியுள்ள இடங்களில் மூன்று அல்லது நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

**காட்டு:** ஆ! அழகான காட்சி. வியப்புணர்ச்சி.

ஐயோ! பாவம். இரக்க உணர்ச்சி.

சீ! சீ!! இதென்ன வாழ்க்கை இழிவு உணர்ச்சி.

போ! போ! நிற்காதே. வெகுளி உணர்ச்சி.

அண்ணா! வா. விளி வேற்றுமை.

**“...” மேற்கோள்குறி:** மற்ற ஆசிரியர்களின்—நூல்களின் மேற்கோள்களை எடுத்தாளும்போது முன்னும் பின்னும் மேற்கோள்குறி இடவேண்டும். நேர்க்கூற்றிற்கு முன்னும் பின்னும் இக்குறி இடவேண்டும்.

**காட்டு:** திருவள்ளுவர் "கற்க கசடற" என்றார்.

"கல்வி கரையில; கற்பவர் நாள்சில" என்று நாலடியாரில் கூறப்பட்டுள்ளது.

தந்தை மைந்தனைப் பார்த்து "பாடங்களைக் கவனமாய்ப் படி" என்றார்.

# 7. வல்லெழுத்து மிகும் இடங்களும், மிகா இடங்களும்.

## வல்லெழுத்து மிகும் இடங்கள்

அ + கிளி = அக்கிளி. இ + கழி = இக்கழி.
அந்த + பையன் = அந்தப்பையன்.
இந்த + பசு = இந்தப்பசு.

**அ, இ** என்ற சுட்டெழுத்துக்களின் முன்னும் **அந்த, இந்த** என்ற சுட்டுத் திரிபுகளின் முன்னும் வலி மிகுந்தது.

எ + குடம் = எக்குடம். எ + படி = எப்படி.
எந்த + பலகை = எந்தப் பலகை.

**எ** என்ற வினவெழுத்தின் முன்னும் **எந்த** என்ற வினாத் திரிபின் முன்னும் வலி மிகுந்தது.

அப்படி + செய் = அப்படிச் செய்.
எப்படி + போனன் = எப்படிப் போனன்?
அங்கு + செல் = அங்குச் செல்.
எங்கு + சென்றார் = எங்குச் சென்றார்?

**அப்படி, எப்படி, அங்கு, எங்கு** முதலான சொற்களின் முன் வலி மிகுந்தது.

என்னை + பார் = என்னைப்பார்.
அவனை + கேள் = அவனைக் கேள்.

இரண்டாம் வேற்றுமை விரியில் வலிமிகுந்தது.

எனக்கு + கொடு = எனக்குக்கொடு.
நாய்க்கு + போடு = நாய்க்குப்போடு.

நான்காம் வேற்றுமை விரியில் வலிமிகுந்தது.

தீ + பொறி = தீப்பொறி. ஈ + கால் = ஈக்கால்

ஓரெழுத்தொரு மொழியின் முன் வலிமிகுந்தது.

திரு + குளம் = திருக்குளம்.
நடு + பகல் = நடுப்பகல்.

குறிலிணை மொழிகளின் முன் வலிமிகுந்தது.

நாய் + கால் = நாய்க்கால்.
நகர் + புறம் = நகர்ப்புறம்.
கீழ் + பக்கம் = கீழ்ப்பக்கம்.

**ய், ர், ழ்** என்ற மெய்களின்முன் வலி மிகுந்தது.

ஓடி + போ = ஓடிப்போ.
திரும்பி + செல் = திரும்பிச் செல்.

இகர வீற்று வினையெச்சங்களின் முன்வலி மிகுந்தது

**சுட்டு, வினவெழுத்துக்களின் முன்னும், இவற்றின் களின் முன்னும், 'அப்படி, அங்கு' முதலான சொற்க முன்னும் இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை விரியின் முன்னும், ஓரெழுத்தொருமொழி, குறிலிணைமொழி இவற்றின் முன்னும், ய ர ழ வீற்று மெய்களின் முன்னும், சில வினையெச்சங்களின் முன்னும் வல்லெழுத்து மிகுந்து வரும்.**

### வல்லெழுத்து மிகா இடங்கள்

அது + பெரிது = அது பெரிது.
இது + தான் = இதுதான்.
எது + சரி = எது சரி.

**அது** முதலான சொற்களின்முன் வலி மிகாமல் வந்தது.

சுடு + சோறு = சுடு சோறு.
அடு + களிறு = அடுகளிறு.

வினைத் தொகைகளின்முன் வலி மிகாமல் வந்தது.

படித்த + பையன் = படித்த பையன்.

நல்ல + காலம் = நல்ல காலம்.

அகர வீற்றுப் பெயரெச்சங்களின்முன் வலி மிகாமல் வந்தது.

வரும்படி + சொன்ஞன் = வரும்படி சொன்ஞன்.

செய்யும்படி + கூறிஞன் = செய்யும்படி கூறிஞன்.

படி என்று முடியும் விளையெச்சங்களின்முன் வலிமிகாமல் வந்தது.

அவஞெடு + சென்ருன் = அவஞெடு சென்ருன்.

என்ஞேடு + பேசிஞன் = என்ஞேடு பேசிஞன்.

**ஒடு, ஓடு** என்னும் மூன்ரும் வேற்றுமை உருபுகளின் முன் வலி மிகாமல் வந்தது.

ஊரிலிருந்து+புறப்பட்டான்=ஊரிலிருந்துபுறப்பட்டான்.

மரத்தினின்று+குதித்தான்=மரத்தினின்றுகுதித்தான்.

ஐந்தாம் வேற்றுமை உருபுகளின்முன் வலிமிகாமல் வந்தது.

எனது + பலகை = எனது பலகை.

என்னுடைய + புத்தகம் = என்னுடைய புத்தகம்.

ஆரும் வேற்றுமை உருபுகளின்முன் வலிமிகாமல் வந்தது.

அண்ணு + பார் = அண்ணு பார்.

அன்ஞய் + கேள் = அன்ஞய் கேள்.

விளி வேற்றுமையின்முன் வலி மிகாமல் வந்தது.

அவனே + செய்தான் = அவனே செய்தான்.

இவஞே + கொடுத்தான் = இவஞே கொடுத்தான்.

**ஏ, ஓ** என்ற இடைச் சொற்களின் முன் வலிமிகாமல் வந்தது.

**'அது' முதலான சொற்களின் முன்னும், வினைத்தொகை, அகர வீற்றுப் பெயரெச்சம், 'படி' என முடியும் வினையெச்சம் இவற்றின் முன்னும், மூன்ரும் வேற்றுமை, ஆரும் வேற்றுமை உருபுகளின் முன்னும், விளி முன்னும், 'ஏ ஓ' என்னும் இடைச் சொற்களின் முன்னும் வல்லெழுத்து மிகாமல் வந்து புணரும்.**

## மொழிப் பயிற்சி வினுக்கள்.

1. வாக்கியத்தின் உறுப்புக்கள் எவை ?

2. வாக்கியத்தின் வகைகளைக் காட்டுடன் விளக்கு.

3. வாக்கியப் பொருத்தம் என்பது யாது ? அது எத்தனை வகைப்படும் ? காட்டுடன் எழுது.

4. எழுத்துப் பிழைகள், சொற்பிழைகள் ஏற்படுவது ஏன் ?

5. வாக்கிய முடிவுப் பிழைகள் எதனுல் ஏற்படுகின்றன ? பிழைகள் ஏற்படாதிருக்க என்ன செய்யவேண்டும் ?

6. வாக்கிய மாற்றம் என்பது யாது ? நான்கு காட்டுகள் எடுத்தெழுதி விளக்குக.

7. நிறுத்தக் குறிகள் எவை ? அவற்றை எவ்வெவ்விடங்களில் அமைக்கவேண்டும் ?

8. விஞக்குறி, வியப்புக்குறி, மேற்கோள்குறி இவற்றை எவ்வெவ்விடங்களில் அமைக்கவேண்டும் ?

9. வல்லெழுத்து மிகுமிடங்களெவை ?

10. வல்லெழுத்து மிகாவிடங்களெவை ?

# KALAITTAMIL ELAKKANAM

## IV FORM—PART I

VIDVAN A. GURUSWAMY AYYA.

TAMIL NADU NOOL PATHIPPAGAM,
WORAIYUR, TIRUCHIRAPPALLI.

Vasan Press, Allimal Street, Tiruchirapalli.